# செந்தமிழ்ச் செல்வி

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES LIBRARY ★ MADRAS-600020 ★
R. 93
14 MAR 1974
14-3-74

## உள்ளுறை


| | பக்கம் |
|---|---|
| கழகம் ஆற்றிய வரலாற்றுச் சிறப்புப் பணி | ௩௬௧ |
| தமிழில் எழுதுவோம் | ௩௬௮ |
| ஆப்பிரிக்கச் சுற்றுலா | ௩௭௭ |
| சிலப்பதிகார ஆராய்ச்சி | ௩௮௨ |
| குறுந்தொகையும் குடும்பவிளக்கும் | ௩௮௯ |
| வடமொழி வேதமும் தமிழ் மறையும் | ௩௯௯ |
| ஆண்மகப் பேற்றை உயர் வென்றல் | ௪0௧ |
| திருச்சியில் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் கிளைத் திறப்பு | ௪0௫ |
| டாக்டர் ஔவை நடராசன் அவர்கட்குப் பாராட்டு | ௪0௬ |
| நல்லாசிரியர்....... தணிகை உலகநாதன் | ,, |
| செய்திகளும் குறிப்புகளும் | ௪0௭ |


சிலம்பு ௪௮] வள்ளுவர் ஆண்டு ௨00௫, மாசி (Mar'74) [பரல்—௭

# 'செந்தமிழ்ச் செல்வி'

## இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்கள்


க. டாக்டர் ந. சஞ்சீவி, எம். ஏ., பி.எச்டி.
*தமிழ்த்துறைத்தலைவர், சென்னைப் பல்கலைக்கழகம்.*

உ. 'சித்தாந்த கலாநிதி', உரைவேந்தர்,
ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள், மதுரை.

ங. திரு. கொண்டல், சு. மகாதேவன் அவர்கள், எம். ஏ., பி. எஸ்ஸி.
*இயக்குநர், தமிழகவரசு தமிழ் வளர்ச்சித்துறை.*

ச. செஞ்சொற்கொண்டல், வித்துவான்,
டாக்டர் சொ. சிங்காரவேலன், எம்.ஏ., டிப். லிங்
*அ. வ. அ. கல்லூரி, மாயூரம்.*

ரு. செந்தமிழ்க் கலைமணி, வித்துவான்,
பண்டித. கா. பொ. இரத்தினம் அவாகள்,
*பி.ஏ. (ஆனர்சு), (லண்டன்) எம் ஏ., பி.ஓ எல். (சென்னை)*
கொழும்பு.

சு. புலவர் இரா. இளங்குமரன்,
*திருநகர், மதுரை-6.*

எ. திரு. இரா. முத்துக்குமாரசாமி, எம்.ஏ., பி.லிப்.
*நூலகர், மறைமலையடிகள் நூல்நிலையம், சென்னை.*



---


# VOICE OF VALLALAR

By Rao Sahib S. R. V. Arasu

வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிவகுத்த வள்ளலார் பெருமானின் 'திருவருட்பா' தெவிட்டாத தீந்தமிழ்த் தெய்வ இலக்கியமாகும். இதனை இதுவரை அனைவரும் பரமனைப்பாடும் பாமாலையாகக் கண்டார்களே தவிர அதில் பொதிந்துள்ள அறக் கருத்துக்களையும் அறிவுரைகளையும் போற்றினரில்லை. மக்களனை வரும் ஒருநிலையாய் வாழ்ந்து, பாரில் கிடப்பதைப் பகுத்துண்டு வாழ வேண்டுமென்று வள்ளற்பெருமான் கூறியிருப்பதை மக்களுணர்ந்து அதன்வழி நடக்க வேண்டுமென்பதற்காக வள்ளற்பெருமானின் அறிவுரைகளைத் தெளிவாக ஆங்கிலத்தில் இராவ்சாகேப் திரு. எஸ். ஆர். வி. அரசு அவர்கள் எழுதியுள்ளார்கள். அருட்பாவில் பொதிந்துள்ள பொருளியல் நோக்கைத் தெளிவாக எடுத்துக்காட்டி அதை வெறும் பக்தி இலக்கியமாகப் படிப்பதில் மட்டும் பயனில்லை என்று அவர் இந்நூலில் ஆங்கிலத்தில் விளக்கியுள்ளார். வள்ளற்பெருமானின் சித்தி நூற்றாண்டு விழாவையொட்டி இது வெளிவருகிறது. ரூ. 5 00

## கழகத்தின் திருச்சிக் கிளை நிலையத் திறப்பு விழா
## 4—3—1974



திவான்பகதூர் **T. M.** நாராயணசாமிப் பிள்ளை அவர்கள் தலைமை தாங்கித் திறந்து வைத்துப் பேசுதல்.

# செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

| சிலம்பு ௪அ | திருவள்ளுவர் ஆண்டு ௨௦௦௫, மாசி<br>மார்ச்சு 1974 | பரல் எ |
|---|---|---|


## கழகம் ஆற்றிய வரலாற்றுச் சிறப்புப் பணி

(முன் பரல் ௯௦௯ஆம் பக்கத் தொடர்ச்சி)

முன் இதழிற் குறிப்பிட்டபடி டாக்டர் மா. இராச மாணிக்கனார் எழுதி 1941இல் கழகவழி வெளியிடப் பெற்ற 'மொகெஞ்சதரோ', 1944இல் வெளியிடப் பெற்ற 'பல்லவர் வரலாறு', 'மறைந்த நகரம்' ஆகிய நூல்களைப் பற்றி விளக்கி எழுதுவதற்கு முன் 'வரலாறு தொகுத்தல்' பற்றிக் கழகம் அவ்வப்போது செய்துள்ள முயற்சிகளைப் பற்றிக் குறிப்பிடுதல் இன்றியமையாததாகும். 1944இலும் 1957இலும் வரலாறுகளை எழுதியனுப்புமாறு தலைப்புக்கள் அமைத்துப புலவர் பெரு மக்கட்கு வேண்டுகோள் அறிக்கை அனுப்பி வைத்தோம். அதனால இரு நூற்றுக்கு மேற்பட்ட புலவர்கள் தத்தம் வரலாற்றுக் குறிப்புக்களை எழுதி யனுப்பி வைத்தனர்.

சில திங்கட்குமுன் மதுரையில் காலஞ் சென்ற தொல் காப்பிய அறிஞர் புலவர் மு. அருணாசலம் பிள்ளையவர்கள் எம் அறிக்கையின்படி தமது வரலாற்றை இரு முறையும் எழுதி யனுப்பி யுள்ளனர். 1957க்குப் பின்னுள்ள வரலாற்றை அவர் தம் நண்பர் ஒருவர் எழுதியனுப்பி வைத்தனர். அது கழகப் புலவர் வரிசை 31ஆவது புத்தகத்தில் வெளியிடப் பெறும், திருவையாறு சித்திர கவிப்புலவர் அப்துல் கபூர் அவர்கள் வரலாறும், கோவைப் புலவரரசு கு. நடேச கவுண்டர் அவர்கள் வரலாறும் பெறுவதற்கு முயற்சி செய்து வருகின்றேன். அவ்

விரண்டும் வரப் பெற்றவுடன் 31ஆவது புத்தகம் அச்சிட்டு வெளியிடப்பெறும்.

1974 சனவரித் திங்களில் வரலாறு கேட்டு அறிஞர்கட்கு அனுப்பப் பெற்ற அறிக்கையினை அடியிற் காண்க.

**வரலாற்று நூல்கள் :**

பேரன்புடையீர்,

வணக்கம். வரலாற்றுச் செல்வமே நந் தொன்மையினையும் உரிமையினையும் உணர்ந்து வாழ வழிகாட்டுவதாகும் என்பது எனது கருத்து. அக் கருத்தைப் பற்றியே சங்கப் புலவர் வரிசையில் 16 நூல்களும், சங்க அரசர் வரிசையில் 6 நூல்களும், ஏறக்குறைய 770 புலவர் வரலாறுகளைக் கொண்ட தமிழ்ப் புலவர் வரிசையில் 30 புத்தகங்களும தமிழ்ப் புலவர் அகரவரிசையில் 5 புத்தகங்களும், அறிவியல் அறிஞர்கள் (உள்நாடு, வெளிநாடு), அரசியல் தலைவர்கள் (உள்நாடு, வெளிநாடு), நாடுகண்டவர், புலவர், கவிஞர், பலதுறைக் கலைஞர் முதலியோர் வரலாறுகள். நாட்டு வரலாறு, மொழி வரலாறு, இலக்கிய வரலாறு ஆகியவைபற்றித் தனித் தனியாக இருநூறுக்கு மேற்பட்ட நூல்களும் கழகம் வெளியிட்டுள்ளது. அவற்றிற் பெரும் பாலன ஒரு பதிப்புக்கு மேல் வெளியிடப் பெறவில்லை அவற்றை நூல்நிலையங்கட்கு வாங்காமையே அதற்குரிய காரணமாகும். ஆசிரியர்கள் தம் மாணவர்கட்கு அவற்றைக் கற்பிக்காமையும் பெற்றோர்கள் தம் பிள்ளைகட்குக் கற்பிக்காமையும் மற்றொரு காரணமாகும்.

இஃதிங்ஙனமிருப்பினும் மேலும் வரலாறுகளைத் தொகுப்பதில் யான் தளர்ச்சியுறவில்லை. யான் விரும்பி வேண்டியவாறு நாடகப் பேராசிரியர் பம்மல் சம்பந்த முதலியார் அவர்கள் எழுதித் தந்த 'யான் கண்ட புலவர்கள்' என்ற நூலொன்று வெளியிடப் பெற்றுள்ளது மொழிப் பேரறிஞர் பாவாணர் அவர்கள் புலவர் சிலர் வரலாறுகளை எழுதித் தந்துள்ளனர். தவயோகி சுத்தானந்த பாரதியார் புலவர் சிலர் வரலாறுகளை எழுதியனுப்பியுள்ளதோடு மேலும் எழுதி வருகின்றனர்.

அவ்வாறே தாங்கள் பாடங்கேட்ட புலவர்கள், நெருங்கிப் பழகியுள்ள புலவர்கள், பழகும் வாய்ப்பு இல்லாவிடினும் பிறர் சொல்லக் கேட்ட புலவர்கள் ஆகியோரைப் பற்றித் தங்கட்குத் தெரிந்தவரை வரலாற்றுக் குறிப்புகளையும் சுவையான நிகழ்ச்சிகளையும் எழுதி அனுப்பும்படி அன்போடு வேண்டுகிறேன்

முதுபெரும் புலவர் டாக்டர் வே. சாமிநாதையர் அவர்கள் தம் ஆசிரியர் வரலாற்றை விரிவாக எழுதியதோடு தம்வரலாற்றையும் ஒரு குறிப்பிட்ட காலம்வரை எழுதியுள்ளனர். அவர்களைப்போல் தமிழ்த் தென்றல் திரு வி க. அவர்களும் தம் வரலாற்று நூலை எழுதியுள்ளனர். எனவே, பெரும் புலவர்கள் தங்கள் வரலாறுகளை எழுதிவைப்பது இன்றியமையாமையாகும்.

தாங்கள் எழுதியனுப்பி வைக்கும் வரலாற்றுக் குறிப்புக்கள் திருத்தமாகப் படி எடுக்கப்பெற்று மறைமலையடிகள் நூல்நிலையத்திலே ஆராய்ச்சியாளர்கட்குப் பயன்படுமாறு பேணி வைக்கப்படும் என உறுதி கூறுகின்றேன்.

தமிழில் அச்சுக்கலை ஏற்பட்டு வெளியிடப் பெற்ற பழைய நூல்களில் அக்காலத்துப் புலவர்கள் வழங்கிய சாற்றுகவிகள் வெளியிடப்பெறும் மரபு இருந்தது எனவே, பெரும்பான்மையான பழைய நூல்களிலுள்ள சாற்றுகவிகள் படி எடுத்துக் கழகத்திலே வைக்கப் பெற்றுள்ளன. அவற்றானும் ஒருகாலத்துப் புலவர்கள் இன்னின்னர் என்பதும், புலவர் சிலரைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புக்களும் கிடைக்கப் பெறுகின்றன. அவற்றை யெல்லாம் ஒரு நூலாக வெளியிடுவது முதன்மையாகும் பொருட்செலவு மிகுதி ஏற்படினும் அது வீண் செலவாகாது என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் மொழி வரலாறு, இலக்கிய வரலாறு, நாட்டு வரலாறு, அரசியல் கட்சிகளின் வரலாறு, குலவரலாறு ஆகியவையும் திருக்கோயில்கள், திருமடங்கள், சமயமன்றங்கள், தமிழ்க் கழகங்கள் ஆகியவற்றின் வரலாறுகளும் புலவர், கவிஞர், பலதுறைக் கலைஞர் முதலியோர் வரலாறுகளும் நம் பழைமையினை யுணர்தற்கும், நம் உரிமைகளைக் காப்பதற்கும், நம் முன்னோர் சென்ற சீரிய வழிகளைப் பின்பற்றி நடப்பதற்கும் வழிகாட்டுஞ் செல்வங்களாகும். இத்தகைய வரலாறுகளின் இன்றியமையாமைபற்றித் தங்கள் உள்ளத்தில் எழும் கருத்துக்களைக் கடமையுணர்வோடு தனியாக எழுதி அனுப்பின் நன்றியுடையவனாவேன் அதனால் நந் தமிழ் மக்களிடத்தே வரலாற்றுணர்வு பெருகும் என்ற நம்பிக்கையுடையேன்.

முதற்கண் தங்கள் வரலாற்றைக் கூடுமானவரை விரிவாக எழுதியனுப்புவதோடு, தங்களுக்குத் தெரிந்த புலவர் பெருமக்களைப் பற்றி அவர்கள் வாழ்ந்தகாலம், படிப்பு, பட்டம், பணியாற்றிய இடம் இயற்றிய நூல்கள், உடன் வாழ்ந்தோர், அவரிடம் பயின்ற மாணவர்கள் போன்ற விரிவான செய்திகளைத் தனித்தாளில் எழுதி அனுப்ப வேண்டுகிறேன்.

தங்கள் அன்பான மறுமொழியை எதிர்பார்க்கும்,

15—1—1974  ஆட்சியாளர்.

இதனைப் பெற்ற அறிஞர் சிலர் கழக முயற்சியைப் பாராட்டுவதோடு அதற்குத் தங்களாலியன்ற உதவிகளைச் செய்வதாக எழுதி ஊக்க மூட்டியுள்ளனர்.

16—2—1974இல் திருநெல்வேலிக் கழகப் பதிவகத்தில் நடைபெற்ற 53ஆம் ஆண்டுக் கழகப் பங்காளிகளின் கூட்டத்துக்குச் சென்றிருந்தேன். 88 அகவையுள்ள முது பெரும் புலவர் பி ஸ்ரீ ஆச்சாரியார் அவர்கள் சென்னை வாழ்க்கையை அறவே விட்டு நீங்கி விட்டிலாபுரம் என்னும் தமது சொந்த

ஊருக்கு வந்திருப்பதாகவும், வழக்கறிஞரும், நூலாசிரியருமான திருவாளர் பி. என். அப்புசுவாமி (அப்புஸ்சாமி) ஐயரவர்களும் சென்னையில் தாம் தொகுத்து வைத்திருந்த பெரும்பான்மையான நூல்களைத் திருவான்மியூரிலுள்ள டாக்டர் வே. சாமிநாதையர் நூல்நிலையத்துக்கு அன்பளிப்பாக வழங்கிவிட்டு எஞ்சிய நூல்களுடன் பாளையங்கோட்டைக்குச் சென்று தம் அருமைத் திருமகளாருடன் தங்கியிருப்பதாகவும் கேள்வியுற்றேன். திரு ஐயரவர்களின் திருமகளார் 'காந்திமதி மகளிர் உயர்நிலைப் பள்ளி'யில் தலைமை யாசிரியராக அமர்ந்து பணிபுரிந்து வருகின்றனர்.

யான் என் இளைய மருகரும் மறைமலையடிகள் நூல்நிலையத்தின் நூலகருமான திரு இரா. முத்துக்குமாரசாமி எம். ஏ. பிலிப். அவர்களோடு திருச்செந்தூருக்கு முருகப் பிரானை வழிபடச் செல்லும் வழியில் என் முதியோர் வாழ்ந்த செய்துங்கநல்லூருக்கு அண்மையிலுள்ள விட்டிலாபுரத்துக்குச் சென்று திருவளர் பி ஸ்ரீ ஆச்சாரியார் அவர்களைக் கண்டு அளவளாவும் வாய்ப்புக் கிடைத்தது. என் பெருமதிப்புக்கும் பேரன்புக்கு முரிய உயர்நீதிமன்ற நடுவரும் நுண்மாண் நுழைபுலச் செலவருமான எஸ். மகாராஜன் அவர்கள் விரும்பியபடி "தம் வரலாற்றை" (autobiography) விரிவாக எழுதுதற்கு வேண்டிய குறிப்புகளைத் தொகுத்துக் கொண்டிருப்பதாகவும், பி ஸ்ரீ அவர்கள் கூறினர். அவ்வாறே எழுதும்படி 80 அகவைக்கு மேற்பட்ட வழக்கறிஞரும் நூலாசிரியருமான திரு பி. என். அப்புசாமி ஐயர் அவர்களையும் கேட்டிருப்பதாகவும் சொன்னமை எனக்குப் பெருமகிழ்ச்சி யளித்தது. திரு. பி. ஸ்ரீ அவர்கள் தம் வரலாற்றை எழுதத் தொடங்கி யுள்ளனர். திரு. பி. என். அ. அவர்களை நேரிற் கண்டு பேசுவதற்கு நேரம் வாய்க்கவில்லை, எனினும் என் இளைய மருகர் தொலை பேசியிலே அவர்களோடு பேசியுள்ளனர். "யான் உயர்திரு மகாராஜன் அவர்கள் விரும்பியபடி என் வரலாற்றை எழுதலாம் ஆனால் அதனை யார் ஏற்று அச்சிடுவர்" எனச் சொன்னார்களாம்.

திரு. பி. ஸ்ரீ ஆச்சாரியார், திரு பி. என். அப்புசாமி ஐயர் ஆகிய இவ்விருவரும் பல நூல்களை எழுதியவரும், இதழ்கட்குக் கட்டுரைகள் எழுதியவரும் பல பேரறிஞர்களோடு பழகியவரும், பல இயக்கங்களை நேரிற் கண்டதோடு அவற்றிற் கலந்தவருமாவர். எனவே அவ் விருவரும் தம் வரலாறுகளை எழுதுவதற்கு மிக மிகத் தகுதியுடையவர்கள் என நன்கு தெரிந்தே உயர்நீதிமன்ற நடுவரவர்கள் அவ்விருவரையும் கேட்டுள்ளனர் எனக் கருதுவது மிகையாகாது. ஆதலால் அவ்விருவரும் காய்தல் உவத்தல் இன்றித் தம் வரலாறுகளை எழுதுவார்களானல்

அவை எத்தனையோ பெருமக்களைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புக்களையும், தங்கள் காலத்திலே நடைபெற்ற நிகழ்ச்சிகளையும் தெரிந்துகொள்வதற்கு நல்ல வாய்ப்பளிக்கும். அங்ஙனம் அவ்விருவரும் எழுதுபவற்றை அச்சிட முன்வரும் பதிப்பாளர்க்குப் பொருளுதவி செய்வதோடு அவ்வறிஞர் பெருமக்களையும் பாராட்டிப் பரிசு அளிப்பதும் தமிழகவரசுக்குரிய கடமையாகும்.

முதுபெரும் புலவர் டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் தம் வரலாறு 43 அகவைக்குப் பின்னுள்ளது வெளி வராமற் போனது எத்துணை வருத்த மளிப்பதாகவுள்ளது.

டாக்டர் ஐயர் அவர்களைப் பற்றி முதன் முதல் தமது பெயரைப் பரிதிமாற் கலைஞர் எனத் தூய தமிழாக்கிய சென்னைக் கிறித்தவக் கல்லூரித் தமிழ்ப் பண்டிதர் வி. கோ. சூரிய நாராயண சாத்திரியார் அவர்கள் தாம் நடத்திய 'ஞான போதினி' என்ற திங்களிதழில் எழுதியதை அடியிற் கண்டு மகிழ்க.

ஒவ்வொரு மொழிக்கும் புலவர் சரிதம் வகுக்கப்படுதல் இன்றியமையாத தொன்றாகும். எனவே புலவர் சரிதம் இல்லாமை மொழிக்கே ஒரு குறைவாக மதிக்கப்படுதல் மட்டுமல்லாமல் அம் மொழி பயின்றோர்க்கும் பயில்வோர்க்கும் உற்றதோர் பெருங் குறையாகவும் மதிக்கப்படுகின்றது.

இத்தகைய குறைபாடு நமது தமிழ்மொழிக் கண்ணுமுண்டு கொல் எனக் கூறித் 'தமிழ் நாவலர் சரிதை' என்றதொரு நூல் வெளிவந்தது என்றும், யாழ்ப்பாணத்தில் காசி செட்டி என்பார் ஒருவர் தமிழ்ப் புலவர் சரித்திரத்தைத் தொகுத்து ஆங்கிலத்தில் எழுதிய (Tamil Plutarch) என்ற நூலைப் பல்லாண்டுகட்கு முன் வெளியிட்டனர் என்றும், அதன் பின்னர் யாழ்ப்பாணத்து ஆ. சதாசிவம் பிள்ளை என்பவர் பாவலர் சரித்திர தீபகம் என்ற நூலை வெளியிட்டனர் என்றும் எழுதியுள்ளனர். ஆனால் அவை யாவும் கால வரிசையில் எழுதப் பெறவில்லை என்னுங் குறையினையுஞ் சுட்டிக் காட்டுகின்றனர்.

அடுத்துத் திருவாமாத்தூரில் கௌமார மடம் அமைத்து வாழ்ந்த திருப்புகழ்ச் சுவாமிகள் என்ற முருகதாச அடிகள் இயற்றிய 'புலவர் புராணம்' என்ற நூலைப்பற்றிக் குறிப்பிடுகின்றார். நூல் முழுதும் செய்யுளாலியன்றுளது. சாமானியமாகப் புலவர் வீடுகளிற் கதையாகச் சொல்லிக் கொள்ளுஞ் செய்திகளெல்லாம் ஒருவாறு தொகுத்து இந் நூலின்கட் கூறப்பட்டுள்ளன. காலவாராய்ச்சி, நூலாராய்ச்சி முதலியன இந் நூலின்கண் காணப்படவில்லை. அடுத்து அட்டாவதானம் வீராசாமி செட்டியார் எழுதிய 'விநோத ரசமஞ்சரி' என்ற நூலைப்

பற்றிக் குறிப்பிடுகின்றார். அஃது அதன் பெயர்ப் பொருளின் படி பொழுதுபோக்கிற்காக எழுதப்பட்டதோர் கதைத் தொகுதி எனக் கொள்ளற்பாலதேயன்றித் தமிழ்ப் புலவர்களைப் பற்றிய தோர் மெய் வரலாறாகக் கொள்ளப்படுவதன்று எனக் குறிப்பிட்டுள்ளார்.

பின் முதுபெரும் புலவர் உ. வே. சாமிநாதையர் அவர்களைப் பற்றிக குறிப்பிடுகையில் ஐயரவர்கள் தாம் பதிப்பித்த சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் தமிழ் நூல்கள் பலவற்றைப் பற்றிய குறிப்புக்களெழுதியிருக்கின்றனர் என்றும், புறநானூற்றிலும் நல்லிசைப் புலவர் பலருடைய சரித்திரக் குறிப்புக்களும் அப் புலவர்களை ஆதரித்தாரைப் பற்றிய குறிப்புக்களும் வரையப்பட்டுள்ளன என்றும் அவையனைத்தையும் ஒருங்கு தொகுத்து இன்னுந் தாம் அருமையாகக் கண்டு குறித்து வைத்துள்ள செய்திகளையுங் கூட்டித் தனிநூலாக வெளிப்படுத்தப் போகின்றார் எனக் கேள்வியுற்றுக் கழிபேருவகை பூக்கின்றோம் என்றும், இம் முயற்சி கைகூடுமாறு நம ஐயரவர்கட்கு இறைவன் திருவருள் புரிவாராக என்றும் எழுதியிருப்பதனால் வரலாற்றுச் சிறப்பினை உயர்திரு பரிதிமாற்கலைஞர் அவர்கள் எங்ஙனம் மதித்துப்பாராட்டுகின்றனர் என்பதைக் கண்டு மகிழ்க.

பரிதிமாற் கலைஞர் அவர்கள் ஞானபோதினியில் எழுதிய புலவர் வரலாறுகளைத் தொகுத்து அவர்கள் பிரிவுக்குப் பின் 1933இல் அவர்தம் மாணவர் திரு ந பலராமையர் அவர்கள் 'தமிழ்ப புலவர் சரித்திரம்' என்ற நூலை வெளியிட்டனர். அதன் கண் தம் ஆசிரியர் போற்றியவாறு டாக்டர் சாமிநாதையரவர்களைப் பற்றி எழுதியிருப்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

பண்டுதொட்டு இன்றளவுந் தோன்றிய தலை சிறந்த தமிழ்ப்புலவர் தம் புலமை யெல்லாந் திரண்டோருரு வெடுத்தாற்போல விளங்கும் செந்தமிழ்ப் பேராசிரியர் மகாமகோபாத்யாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்களே என்பது தேற்றம். இவ்வுண்மையைப் பல்லாண்டுகளுக்கு முன்னரே ஆசிரியர் கண்டறிந் தெழுதியது பெரிதும் பாராட்டற்பாலது. செந்தமிழை முன்னேற்றக் கருதி அரும் பெரும் பாடுபடுஞ் செல்வர்கள் பலரும், புலவர் சிந்தாமணியாகிய மகா மகோபாத்தியாய ஐயர் அவர்கட்கு உதவித் துணையாக வேறு சில தக்க புலவரை அமைத்துக் கொடுத்து அன்னார் தம் மனக்குகையுள் பொதிந்து கிடக்கும் பெறலரும் மணிக்குவைகளாகிய தமிழ்ப் புலவர் வரலாறுகளை வெளிப்படுத்த முயல்வராயின் அது தமிழகஞ் செய்த பெருந்தவப்பயனாகும். இவ்வாறு திரு. ந. ப. அவர்கள் கூறியுள்ளார்.

இப்போது காட்டுப் பாடியிலிருக்கும் 73 அகவை நிரம்பிய மொழிப் பேரறிஞரும், வேர்ச்சொல் அகரமுதலி எழுதிவருபவருமான தேவநேயப் பாவாணர் அவர்கட்காவது நமது தமிழக வரசோ நம் செல்வர்களோ தக்க புலவர்களை அமைத்துக் கொடுத்து அவர்தம் மனக்குகையுட் பொதிந்து கிடக்கும் வேர்ச்சொற் பொருட்குவியலை வெளிப்படுத்துவது தனிப்பெருங் கடமையாகும். இறைவன் அருள் புரிவானாக!

முதுபெரும்புலவர் டாக்டர் வே. சாமிநாதையரவர்கள் தம் ஆருயிர் ஆசிரியர் மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்கள் சரித்திரத்தை இரண்டு பாகங்களாக வெளியிட்டுள்ளார். முதற் பாகத்தில் 12 பக்க அளவில் அவர்கள் எழுதியுள்ள முகவுரையினைத் தமிழறிஞர் ஒவ்வொருவரும் படித்து அவர்கள் நூல்களைப் படிக்குங்காலும், புலவர்களோடு பழகுங் காலும் வரலாற்றுக் குறிப்புக்களை எழுதி வந்தது எத்துணைப் பயனுடைய செயலாகும் என்பதை நன்கு அறிந்து மகிழ்வார்களாக.

**கடிதங்களும் வரலாறு கூறும்**

டாக்டர் ஐயர் அவர்கள் தமக்கு மேனாட்டறிஞர்கள் உட்படப் பல பேரறிஞர்கள் எழுதிய கடிதங்களையெல்லாந் தொகுத்துப் பாதுகாத்து வைத்திருக்கின்றனர். அவை வரலாறு எழுதுவதற்கு எத்துணைப் பயன் தருகின்றன என்பதை உய்த்துணர்ந்து பார்ப்பவர்கட்கே நன்கு விளங்கும். ஆனால டாக்டர் ஐயர் அவர்கள் யாதொருவர் துணையுமின்றித் தம்கைப்படவே பலர்க்கும் கடிதங்களும், பாராட்டுரைகளும், அணிந்துரைகளும், சாற்றுகவிகளும் எழுதியுள்ளனர். பதிக்கப்பெற்ற நூல்கள் வழி ஒரு சில பாராட்டுரைகள், அணிந்துரைகள், சாற்றுகவிகள் கிடைக்கப்பெறுகின்றன. ஆனால் எழுதப் பெற்ற கடிதங்கள் கிடைக்கவில்லை. இங்ஙனமே மறைத்திரு மறைமலையடிகளார்க்கு அவர்கள் காலத்தில் பெரும்புலவர்களில் எந்தனையோ பேர் கடிதங்கள் எழுதியிருப்பர். அவற்றில் ஒன்றிரண்டுகூடக் கிடைக்கவில்லை. அவர்கள் அவற்றைப் பாதுகாத்து வைக்காமையே அதற்குரிய காரணமாகும். ஆனால் அவர்கள் தம்கைப்படவே அறிஞர்கட்கும் அன்பர்கட்கும் எழுதிய கடிதங்கள் பெரும்பான்மையோரால் பாதுகாத்து வைக்கப்பெற்றுள்ளன. அதற்குக் காரணம் அவர்கள் கையெழுத்தின் அழகும், உரைநடையழகுமே யாகும். அடிகளாரால் எழுதப்பட்ட கடிதங்களில் ஏறக்குறைய அறுநூறு கடிதங்கட்கு மேல் என் தமையனாராலும், தமியேனாலும் தொகுக்கப் பெற்றவனவாகும்.   (தொடரும்)   வ. சு.

# தமிழில் எழுதுவோம்

[ஆட்சிச்சொற் காவலர் கீ. இராமலிங்கனார் எம். ஏ.]

(முன்பரல் ௬௪ ஆம் பக்கத் தொடர்ச்சி)

## 7. மடலின் வகை பல

அரசு அலுவலகங்களில் நடக்கும் எழுத்து வேலைகளைப் பற்றி அந்த அந்த அலுவலகங்களில் பணிபுரிவோர் நன்கு அறிவர். எல்லாவகை எழுத்துப் பணிகளைப் பற்றியும், எல்லா அலுவலகங்களிலுமுள்ளவர்களும அறிந்து கொள்ளவும், பொதுமக்களுங்கூடத் தெரிந்து கொள்ளவும், வசதியாகுமாறு, அவ் எழுத்து வேலைகள் அனைத்தையும் குறித்து, ஒருவாறு, இங்கு விளககுவாம்.

அலுவலகத்தின் எழுத்துப்பணி, இருபெரும் பிரிவின தாகும். ஒன்று அலுவலகத்தை விடடு வெளியே போகாதது; இவ்வகை எழுத்து வேலையைக் 'குறிப்பு' (Note) என்போம். அலுவலகத்தை விட்டு வெளியே செல்லும் எழுத்து 'மடல்' எனப்பெறும்.

அலுவலகத்துக்குள்ளேயே, எழுத்தர் (Clerk), இளநிலை உதவியர் (Junior Assistant), உதவியர் (Assistant), கண்காணிப்பவர் (Superintendent), தலைமை எழுத்தர் (Head Clerk), பிரிவு அலுவலர் (Section Officer) போன்ற அலுவலகப் பணியாளர்களிடையேயும், துறைக்கு ஏற்றபடி பல அலுவல் பெயர்களை (Designations) யுடைய, மேல் அலுவலர்களிடையே யும் அலுவலகத்திலேயே சென்று கொண்டிருக்கும் எழுத்து வேலையே குறிப்பு என்பதாகும்.

### அலுவலகக் குறிப்பு :

இஃது இருவகைப்படும். ஒன்று 'அலுவல்முறைக்' குறிப்பு. இதை 'அலுவலகக் குறிப்பு' (Office Note) என்பர். இன்னொரு வகைக் குறிப்பு, 'அலுவல்முறை சாராக் குறிப்பு' (Unofficial Note) எனப்பெறும். இதனைச் சுருக்கமாக 'முறைசாராக் குறிப்பு' எனலாம். இவ்வகைக் குறிப்புப் பெரும்பாலும் அமைச்சகத்தில் (Secretariat) எழுதப் பெறுவது. அரசின் தலைமை அலுவலகமே அமைச்சகம்.

அமைச்சகத்தை, 'அரசின் தலைமைச் செயலகம்' என்றும் கூறுவர். 'அமைச்சர்' என்னும் சொல் மந்திரிகளையும் செயலர்

களையும் ஒப்பக் குறிக்கும் ஒரு சொல்லாகும். பண்டைக்காலத்தில் மன்னனின் செயலர்கள் அமைச்சர்கள். முன்பு செயலர்களின் அலுவலகம் (Secretaries Office) ஆக இருந்தது, நாடு முழு உரிமை பெற்றபின்பு சிறப்பாக, அமைச்சர்களின் அலுவலகமாகவும் அஃது ஆகியிருக்கிறது. எனவே, 'செயலகம்' என்னும் சொல் 'Secretariat' என்னும் சொல்லுக்குப் பெரிதும் பொருத்தமான சொல்லாகும்.

**முறைசாராக் குறிப்பு : (Unofficial Note)**

'முறைசாராக் குறிப்பு' (Unofficial Note) என்பதைச் சிறிது விளக்க வேண்டும். இக்குறிப்புகள் அமைச்சகத்திலே ஒரு துறையிலிருந்து இன்னொரு துறைக்கு அனுப்பும் குறிப்புகளுக்குப் பெயர். அமைச்சகம், ஒரே அலுவலகமாகக் காணப்பெற்றாலும், அதில் அரசிலுள்ள பலதுறைகளும் இருக்கின்றன. வருவாய்த்துறை, சட்டத்துறை, நிதித்துறை, உள் (Home) துறை, உணவுத்துறை, வேளாண்துறை, பொதுவியல் (Public) துறை, இப்படி இன்னும் பல துறைகள் உள்ளன. ஒவ்வொரு துறையும் ஒரு தனி அலகு (Unit) ஆகும், ஒரு தனி அலுவலகமே.

ஒரு துறையின் அலுவலகத்திலிருந்து இன்னொரு துறையின் அலுவலகத்துக்கு எழுதும்போது மடலாகவே (Letter) எழுத வேண்டும் என்பது மரபு Convention). அம் மரபைப் பின்பற்றி மடலாக எழுதாமல், 'குறிப்பாக' (Note) எழுதும் வழக்கம் ஆங்கிலர் ஆண்ட காலத்தில் இருந்து வந்தது. இப்போதும் அம்முறையே கையாளப்பெறுகிறது; வசதிக்காக இங்ஙனம் செய்யப் பெற்றது; பெறுகிறது. அமைச்சகத்தில் ஒரு துறையின் கோப்பு (File) அப்படியே இன்னொரு துறைக்கு அக்கோப்பின் மேலேயே ஒரு குறிப்பு எழுதி அனுப்பப்பெறும். அத்துறை, அக் கோப்பிலேயே தன் கருத்தைக் குறிப்பு வடிவிலே எழுதி இத்துறைக்குத் திருப்பி அனுப்பிவிடும்.

இங்ஙனம் இருதுறையிலும், கோப்பில் எழுதும் குறிப்பே 'அலுவல் முறை சாராக் குறிப்பு' (Unofficial Note) எனப்பெறுவதாயிற்று. அலுவல் முறையில் எழுத வேண்டிய மரபின்படி மடல் வடிவில் எழுதாமல், அஃதாவது அலுவல்முறை சாராமல், அதற்கு மாறாகக் குறிப்பு வடிவில் எழுதுவதால் இவ்வாறு பெயர் பெற்றது. இதனை ஆங்கிலத்தில் சுருக்கமாக 'U. O. Note' என்பர். தமிழில் 'அ. மு. சாராக் குறிப்பு' எனலாம். அதையும் சுருக்கி நாளடைவில் 'சாராக்குறிப்பு' என்று கூறினாலும் போதும்.

**பிரிப்புக் குறிப்பு :**

அலுவலகக் குறிப்பு, ஒரே கோப்பில் பல செய்திகளைப் பற்றி விரிவாக எழுத வேண்டி நேரும்போது ஒவ்வொரு செய்திக்கும் கோப்பில் ஒவ்வொரு தனிப்பிரிவு வகுத்துக் கொண்டு, அந்தந்தச் செய்தியைப் பற்றி, அவ்வத் தனிப்பிரிவில் குறிப்பு எழுதுவர். அமைச்சகத்தில், பிற துறைகளுக்குச் 'சாராக் குறிப்பு' முறையில் இவ்வாறான கோப்பு ஒன்று அனுப்பப் பெற்றால், அவ்வப்பிரிவில், பிற துறையினரும் தம்தம் கருத்துக் களைக் குறிப்பர். இங்ஙனம் பல பகுதிகளாகப் பிரித்துக் கொண்டு குறிப்பு எழுதுவதை 'பிரிப்புக் குறிப்பு' (Sectional Note) எழுதுதல் என்பர். இதுவும் அலுவலகக்குறிப்பே யாகும்.

அலுவலகத்தின் எழுத்து வேலையில் 'குறிப்பு' (Notes) என்பதும், இவ்வாறாக. ஒரு பகுதியேயாகும். ஆனால், பெரும் பகுதி, மடல்வகைகளே யாதலின், இந்த இயல்பின் தலைப்பு 'மடலின் வகைபல' என்றே தரப்பெற்றது. பெரும்பான்மை பற்றிச் சூட்டிய பெயர் இது.

**மடல் வகை**

இனி, மடலின் வகைகளைக் குறித்து அறியலாம். 'மடல்' என்றால் 'கடிதம் என்றே பொருள். வடிவில் சிறிபதும், பொருள் தெரிந்ததுமான, தமிழ்ச் சொல்லாக இருத்தலின், 'மடல்' என்னும் சொல்லைக் 'கடிதம்' என்று வழக்கமாகச் சொல்லும் சொல்லுக்கு மாற்றாகப் பயன்படுத்தலாகிறது. மடல் என்றால் 'இதழ், 'தாள்,' 'ஏடு' என்றெல்லாம் பொருளாகும்' தாழை மடல், தாமரை இதழ். பனந்தாள், ஓலை ஏடு என்று வழங்கும் வழக்கத்தை யறிவோம். 'குறிப்புகளை' 'Notes' என்பதுபோல. 'மடல்களை', 'வரைவுகள்' (Drafts) என்போம். குறிப்பும் வரையப் பெறுவதேயானாலும், 'மடலை' மட்டும் 'வரைவு' என்று சொல்லுகிறோம். அதற்குக் காரணம் உண்டு. 'மடல் மற்றவர் பார்த்துச் செப்பனிட்டு நிறைவடிவம் தருவ தற்காக எழுதப் பெறுவதால். அதை மட்டுமே ' வரைவு' என்று சொல்லும் வழக்கம் ஏற்பட்டுவிட்டிருக்கிறது.

**வரைவு**

வரைவு (Drafts) களில் பலவகை உண்டு: (அ) மேல் குறிப்பு (Endorsement); (ஆ) குறிப்பு மடல் (Memorandum) i. கேட்பு மடல் (Reference), ii. முடிப்பாணை Final Disposal, iii. குற்றஞ்சாட்டுக் குறிப்பு மடல் (Charge Memorandum);

(இ) அலுவலக ஆணை (Office Order); (ஈ) நேர்முக மடல் (Demi Official Letter); (உ) மடல் (Letter) (ஊ) அலுவல் செயல்முறை (Office Proceedings); (எ) அரசாணை (Government Order) (ஏ) நினைவூட்டு (Reminder); (ஐ) திரும்பு நினைவூட்டு (Exchange Reminder) (ஒ) அறிவிப்பு (Notice); (ஓ) அறிவிக்கை (Notification); (ஔ) அரசறிவிப்பு (Press Communique) :(ஃ) அரசின் சாற்றுரை (Proclamation) இன்னும் சில.

இவை ஒவ்வொன்றைப் பற்றியும் இங்கே சிறிது அறிவோம். இவை ஒவ்வொன்றின் வடிவத்தையும் அடுத்த இயலில் பார்ப்போம்.

(அ) மேல் குறிப்பு (Endorsement)

ஒருமடல் எழுதப் பெற்ற தாளின் மேலேயே எழுதுவது இது. குறிப்பு (Notes) வடிவத்தில், மேலே எழுதப்பெறுவதால் 'மேல் குறிப்பு' எனலாயிற்று. வெளி அலுவலகத்திலிருந்து வரும் தாளின் மீது, இம் 'மேல் குறிப்பு' எழுதித் திருப்பி விடுவர் அவ்வெளி அலுவலகம், மேல்குறிப்பு எழுதும் அலுவலகத்துக்கு ஒத்த நிலையிலுள்ள அலுவலகமாகவோ, கீழுள்ள அலுவலகமாகவோ, பெரும்பாலும் இருக்கும். தனக்கு மேலுள்ள அலுவலகத்துக்கும் சில நேரம் குறிப்பு எழுதுவது முண்டு. 'Endorsement' என்பதை 'Endt' என்று சுருக்கி வரைவதைப் போல, 'மேல்குறிப்பு, என்பதை 'மே. கு' என்று சுருக்கி எழுதலாம்.

(ஆ) குறிப்பு மடல் (Memorandum)

இதுவும் 'குறிப்பு' (Notes) வடிவத்தில் இருக்கும். எனவே 'குறிப்பு மடல்' எனப் பெற்றது. மடல் எழுதும்போது தொடக்கத்தில் 'ஐய' என்று போட்டு வரைவதைப்போல் குறிப்பு மடலில் 'ஐய' என்று போடுவதில்லை. குறிப்பு மடல் கீழுள்ள அலுவலகங்களுக்கே எழுதப்பெறும். ஒத்த அலுவலகங்களுக்கோ, மேலுள்ள அலுவலகங்களுக்கோ எழுதுவது கூடாது.

இக் குறிப்பு மடலில் மூன்று வகை உண்டு; அவையாவன: i. கேட்பு மடல் (Reference), ii. முடிப்பாணை (Final Orders), iii. குற்றஞ் சாட்டு மடல் (Charge Memorandum). ஒரு செய்தியைத் தெரிவிக்கும்படி கேட்டு எழுதுவதே 'கேட்பு மடல்'. குறிப்பு வடிவத்திலேயே தாளின்மீது முடிவாக ஆணை போட்டுத்

தானே முடித்து விடுவது, 'முடிப்பாணைக் குறிப்பு' மடல் ஆகும். ஒருவர் மீது குற்றஞ்சாட்டி எழுதுவது, குற்றஞ் சாட்டுக் குறிப்பு மடலாகும்.

இம் மூன்று வகைக்கும், குறிப்பு மடல் வடிவத்தைப் பயன் படுத்தாமல், மடல் (Letter), வடிவத்தையோ 'நேர்முக மடல்' (Demi Official) வடிவத்தையோ பயன்படுத்துவதும் உண்டு. இதைப் பற்றிப் பின்னால் காண்போம்.

'Memorandum' என்பதை 'Memo' என்று சுருக்கிக் கூறுவர். அதே போல் 'குறிப்பு மடல்' என்பதைக் 'கு. ம' என்னலாம்.

(இ) அலுவலக ஆணை (Office Order)

இதுவும் குறிப்பு வடிவத்திலேயே எழுதப் பெறும். அலுவலகப் பணியாளர்களை அமர்த்தல் (Appointment), மாற்றல் (Transfer), அவர்களுக்கு விடுப்பளித்தல் (Leave)போன்ற செயல்களுக்கு இவ்வடிவம் பயன்படுகிறது. அலுவலகத்துக் குள்ளேயே செல்லும் ஆணையாகலின் 'அலுவலக ஆணை' எனப் பெற்றது. அலுவலக ஏற்பாடுகளுக்கும் பிறவற்றிற்கும் இது பயன்படும்.

(ஈ) நேர்முக மடல் (Demi Official Letter)

இது மடல் வடிவமுடையதே. எழுதப் பெறுகிறவரது உறவின் தன்மையைப் பொறுத்து 'ஐய', 'அன்பார்ந்த ஐய', 'அன்புமிக்க ஐய', 'அன்பான திரு. முருகு' 'அன்பான முருகு' என்பன போன்ற விளிகளில் ஏதேனும் பொருத்தமான ஒன்றை இட்டு இம் மடலைத் துவங்குவர். நேர்முகமாக உரையாடுவது போன்ற மொழியில் இம் மடல் அமையும். மடலை முடிக்கும் போது 'தங்கள் அன்பார்ந்த', 'உங்கள் உண்மையுள்ள' என்று எழுதி ஒப்பமிடுவர்.

இம் மடலின் இறுதியில் இடப்பக்கத்தில் பெறுகிறவரின் பெயர், அலுவல், முதலியவற்றை எழுத வேண்டும். தலைப்பில் இவை வரையப்பெறா.

மேல் அலுவலகம், கீழ் அலுவலகம் இரண்டிலுமுள்ள அலுவலர்களுக்கு இம்மடல் வரையப்பெறும்.

(உ) மடல் (Letter)

இதுவே, ஓர் அலுவலகத்திலிருந்து இன்னோர் அலுவலகத்துக்கு எழுதும்போது இயல்பாகப் பயன்படுத்தும் வடிவம்.

'ஐய' என்னும் விளியுடன் தொடங்குவது மரபு. 'மதிப்பமைந்த ஐய' (Respected Sir), 'போற்றற்குரிய ஐய' (Revered Sir) என்று துவங்குகிற வழக்கமும் இருக்கிறது. இஃது ஆங்கில மரபு அன்று என்று ஆங்கிலப் பேராசிரியர்கள் சொல்லக் கேட்டதுண்டு. இவ்வாறு எழுதப் பெற்றுவிட்டவர்களுக்கு இம்முறையில் விளியைப் போட்டு எழுதவில்லை என்றால், அவர்கள் அதைக் குறையாக எண்ணி விடுவரோ என்னும் அச்சத்தால், இவ் விளிகளை இட்டு வரையும் வழக்கம் இன்னமும் செயலில் இருந்து வருகிறது.

முடிக்கும்போது 'தங்கள் நம்பிக்கைக்குரிய', 'நம்பிக்கையுள்ள' என்னும் முடிபுகள் போன்றவற்றில் ஒன்றைப் பெய்து அதன் கீழ் ஒப்பமிடுவர். முற்காலத்தில் வழங்கிய "தங்கள் கீழ்ப்படிதலுள்ள ஊழியன்"' 'மிகவும் பணிவான ஊழியன்", "மிகப் பணிவுள்ள ஊழியனாக என்றுமுள்ளவன்" போன்ற முடிபுகள் எடுபட்டு விட்டன.

துவங்கும்போது இருக்கின்ற விளியான 'ஐய' என்பதை 'ஐயா' என்றும் எழுதுகின்றனர். இஃது அண்மை விளியாதலின் 'ஐய' என்பதே பொருத்தம். மடலைப் பெறுபவர் தொலைவிலுள்ளவராயினும், மடலை அவர் கையிலேந்திப் படிக்கும்போது அண்மையில் இருப்பவரை விளிப்பது போன்ற நிலையே ஏறபடுவதால், 'ஐய' என்னும் விளியை இடுவது தான் சரியாகத் தோன்றுகிறது.

தலைப்பில் 'From', 'To' என்று ஆங்கில மடலில் எழுதுவதைத் தமிழில் 'விடுநர்', 'பெறுநர்' என்று சுருக்கமாக எழுதலாம். 'அனுப்புகிறவர்', 'பெறுகிறவர்' என்றும் நீள வடிவங்களைப் பயன்படுத்த வேண்டுவதில்லை. 'விடுநர்' பகுதியில், மடலை விடுப்பவரின் பெயரையும், அலுவலையும் முகவரியையும் எழுதுவர். ஆனால், 'பெறுநர்' பகுதியில் பெறுகிறவரின் பெயரை இடுவது மரபு அன்று. ஏனென்றால் அனுப்பும்போது எந்தப் பெயரையுடைய அலுவலர் அனுப்புகின்றார் என்பது உறுதியாகத் தெரியும். ஆனால் அம் மடல் போய்ச் சேருகின்ற அலுவலகத்தில், அது சேரும்போது, அங்கு இருக்கும் அலுவலர் யார் என்று திட்டமாகச் சொல்ல இயலாது. முதல் அலுவலகத்தில் மடலை வரைகின்ற நேரத்தில் அதுபோய்ச் சேரும் அலுவலகத்தில் இருந்த அலுவலர் பெயர் தெரிந்திருந்தாலும், அம்மடல் அங்குப் போய்ச்சேருகின்ற நேரத்தில் அந்த அலுவலரே இருக்கின்றாரா, அவர் மாறி வேறொருவர் இடப்பெற்று விட்டாரா என்று உறுதியாகத் தெரிவதற்கில்லை.

### (ஊ) அலுவல் செயல்முறை (Office Proceeding)

சில நடவடிக்கைகளை எடுத்த பிறகு, தீர்ப்பு எழுதுவது போல அமைவது இது. இதனை 'Proceedings' என்னும் ஒரே சொல்லால் சொல்வதுமுண்டு. தமிழில் 'செயல்முறை' என்னலாம். இதை முன்பு 'நடவடிக்கை' என்றே எழுதிக் கொண்டிருந்தோம்.

'Collector's Proceeding நன்றாயில்லை' என்று அச் செயல் முறையால் குறையுண்டவர் கூறுவர். இதனைத் தமிழிலேயே சொல்வதானல், 'ஆட்சியர் நடவடிக்கை நன்றாயில்லை' என்று சொல்ல வேண்டி வரும். இஃது அவரது ஒழுக்க நிலையைக் குறைகூறுவது போல அமைகின்றது ஆதலின். 'நடவடிக்கை' என்னும் சொல்லைப் பயன்படுத்துதல் வேண்டாம் என்று, ஆட்சிமொழிக் குழுவின் தலைவராக இருந்த திரு. எஸ். வேங்கடேசுவரன் ஐ. ஏ. எஸ். அவர்கள் கூறியிருக்கிறார்.

இஃது ஒரு தீர்ப்புப் போல அமைவது ஆதலின், துவக்கத்தில் 'விளி' ஏதும் இடுவதில்லை. பல நடவடிக்கைகளை எடுத்த பின்பு இறுதியில் இத் தீர்ப்பைச் செய்கின்றவரின் பெயர் பிறவற்றைத் தலைப்பில் பின்வருமாறு எழுதுவோம்.

''முன்னிலை : திரு. பெயர் அலுவல் பெயர்
(Present : Thiru. Name.................Designation)

இத் தீர்ப்பின் இறுதியில், முடிப்புத் தொடர் ஏதும் வரைவதில்லை. ஒப்பத்தின் கீழ் அலுவல் பெயர் வரையப் பெறும். இது எவருக்கும் நேரே விளக்கப் பெறுவது அன்று ஆதலின், முகவரிப் பகுதியிலே படி (Copy-To) என்று எழுதியே யார் யாருக்கு இஃது அனுப்பப் பெற வேண்டுமோ அவரவர் பெயரை எழுதுவர்.

### (எ) அரசாணை (Government Order)

இஃது அமைச்சகத்திலிருந்து அரசு இடும் ஆணை. இதன் தலைப்பில் எவருக்கு இது அனுப்பப் பெறுவது என்பதைக் குறிப்பதில்லை. குறிப்பு வடிவத்திலேயே இதன் உடல் பகுதி அமையும். 'செயல்முறை' (Proceeding) வடிவில் அமையுமென்று சொல்வது பெரிதும் பொருத்தமாகும். முகவரிப் பகுதியிலே, பெறுபவர்கள்,பிறர், பெயர்கள் குறிக்கப்பெறும்.

அரசாணையில் இரண்டு வகையுண்டு. ஒரு காலத்திற்குப் பிறகு அழித்துவிடுவன ஒருவகை. என்றும் பாதுகாக்கப் பெற

வேண்டுவன இன்னொரு வகை. இவற்றை முறையே 'வாலாயம்' (Routine), 'நிலை' (Miscellaneous) என்பர். 'நிலை' என்னும் சொல் 'Miscellaneous' என்னும் சொல்லுக்குப் பொருத்தமில்லாததே. ஆனாலும் முதலில் இவ்வகை ஆணைக்கு ஆங்கலத்தில் பெயர் வைத்தபோது ஏதோ வேறு ஒரு காரணத்தைக் கொண்டு இவ்வாறு 'Miscellaneous' என்று வைத்து விட்டனர். அக் காரணத்தை இங்கு விளக்கினால் இவ் இயல் நீண்டுவிடும். மேலும் அவ் விளக்கம் இன்று நமக்குத் தேவையுமில்லை.

"G. O. Mis" "அ.ஆ (நிலை)" என்பதில் இரண்டு உட் பிரிவுகள் உண்டு. ஒன்று அச்சு வடிவம் பெறுவது இதனை "G. O Press" என்பர். இன்னொன்று அச்சு வடிவம் பெறாதது. முற்காலத்தில் இது கையெழுத்துப்படியாக இருந்ததால், 'Manuscript' என்னும் சொல்லை இதற்குப் பயன்படுத்தினர். பிறகு தட்டச்சுப்பொறி வந்தது. தட்டச்சு செய்தே இப்போது எல்லா ஆணைகளும் வெளியே செல்கின்றன. என்றாலும் இன்னும் ஆங்கிலத்தில் 'Manuscript' என்னும் சொல்லை பயன்படுத்தப்படுகிறது. தமிழில் 'அச்சிடா' என்னும் சொல்லை ஆளலாம்.

**(ஏ) நினைவூட்டு** (Reminder)

இஃது அனுப்பப்பெறும் அலுவலரைப் பொறுத்துக் 'குறிப்பு மடல்' வடிவிலோ, 'நேர்முக மடல்' வடிவிலோ 'மடல்' வடிவிலோ அமையும்.

**(ஐ) திரும்ப நினைவூட்டு** (Exchange Reminder)

நினைவூட்டு எழுதப்பெறும் தாளிலேயே செய்தியின் நிலையைக் குறிப்பதற்கு இடம் ஒதுக்கியிருப்பர். அந்த இடத்தில் எதிர் அலுவலகத்தில் அத்தாள் எந்த நிலையில் உள்ளது என்பதை நிலையை யெழுதித் திருப்பிவிடுவர். இந் நினைவூட்டின் படிவம் அலுவலகங்களில் அச்சு செய்து வைக்கப் பெற்றிருக்கும்.

**(ஒ) அறிவிப்பு** (Notice)		**(ஓ) அறிவிக்கை** (Notification)

இது குறிப்பு வடிவிலே இருக்கும். ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு (Tender Notice) போன்றவையும் இதனுள் அடங்கும். அரசிதழில் (Gazette) அரசினர் போடும் ஒருவகை அறிவிப்பே

அறிவிக்கை யெனப்பெறும். Notice, Notification வேறு வேறு சொற்களாக இருப்பது போலத் தமிழிலும் முறையே 'அறிவிப்பு', 'அறிவிக்கை' என்னும் வேறுவேறு சொற்கள் ஆளப் பெற வேண்டிய தேவையேற்பட்டது.

(ஔ) அரசறிவிப்பு (Press Communique)

அரசிதழிலோ, செய்தித்தாள்களிலோ, அரசின் செய்தி யொன்றை விளக்கிப் பொதுமக்கள் அறியுமாறு வெளியிடப் பெறுவதே இது. இத்தகைய அறிவிப்பு 'Press Release' 'செய்தி விடுக்கை, என்னும் பெயராலும் வெளியாவதும் ஒருவகை யாகும்.

(ஃ) சாற்றுரை (Proclamation)

இஃது உச்ச நிலையிலுள்ள அரசுத் தலைவர் ஒருவர் மக்களறிய ஒரு செய்தியைச் சாற்றுவது.

இம் மடல் வகைகளின் வரைவுகளை அடுத்த இயலில் காண்போமாக.

---

## யோக நித்திரை (அறிதுயில்)

'யோக நித்திரை' என்னுஞ் சொற்கள் வடமொழிக் குரியவை; இந்தச் சொற்களினால திருமால் செய்தருளுந் துயில் அறிவோடு கூடியதென்பது தெளிவாக விளங்காவிடினும், இவற்றிற்கு நேராக வழங்கும் 'அறிதுயில்' என்னுஞ் செந் தமிழ்ச் சொற்கள் அத் தூக்கம் அறிவோடு நிகழ்வதென்ப தனைத் தெளிவாகப் புலப்படுத்துகின்றன; பழைய தமிழ்ப் புலவரும், "அரவணைப் பள்ளியில் அறிதுயில் அமர்ந்த" என்று பாடியிருக்கின்றனர்.

—மறைமலையடிகள்

# ஆப்பிரிக்கச் சுற்றுலா

[கவியோகி சுத்தானந்த பாரதியார்]

(முன் இதழ் ௧ ௯௨ ஆம் பக்கத் தொடர்ச்சி)

## 12. தமிழர் குழுவம்

இங்கே தமிழருக்குத் தமிழ் ஆர்வம் கொழுந்துவிட்டெரிகிறது. அதிலும் தனித்தமிழ், தனிச்சைவம், தனித் திருமுறை முழக்கம் ஆக்கம் பெற்றுள்ளன. தமிழ்க் குழுவம் (Tamil Federation) என்ற சங்கம் அரிய பெரிய ஆக்கவேலைகளைச் செய்கிறது; ஆடல் பாடல் அமளியாக நடத்துகிறது. அந்தச் சங்கத்தில் கவுண்டர், பத்தர், படையாட்சி, பிள்ளைமார், முதலியார், நாயுடுக்கள், ரெட்டியார்கள் எல்லாரும் சேர்ந்து தமிழ் வளர்க்கிறார்கள். இவர்கள் பள்ளிக்கூடங்களை நாட்டித் தமிழும் ஆங்கிலமும் கற்பிக்கின்றனர். தென்னாப்பிரிக்கத் தமிழருள்ளே சாதிவேறுபாடில்லை. அப்பன் முதலி, அம்மா பிள்ளை, ஒரு மாப்பிள்ளை நாயுடு, இன்னொருவர் கவுண்டர், இன்னொருவர் ரெட்டியாயிருப்பார்; மகள் ஒரு படையாட்சியை மணப்பாள். டர்பானில் ஒரே ஓர் ஐயர் இருக்கிறார். அவர் மாப்பிள்ளை ஒருவர் கவுண்டர்; இன்னொருவர் நாயுடு. வகுப்புப் பெயர்தான் முன்னிற்கும். இராமசாமிப் படையாட்சி—என்றால் ஆர். படையாட்சி; தங்கவேல பத்தர் என்றால் T. V. பத்தர் என்று அழைக்கப்படுவார். ஆதலால் நாம் எல்லாரையும் தமிழர் என்றே அழைப்போம். பெயர் மறந்தாலும் அன்புப் பெருமை மறக்கவில்லை.

தமிழர் நாட்டிய தமிழ்க் குழுவம் என்னைச் சிறப்பாக வரவேற்றது. கூட்டப் பாடல் முழங்கியது. பிறகு நாட்டியம் நடந்தது. நான் சிலப்பதிகாரத்தையும், ''மற்றுப் பற்றெனக் கின்றி'' என்ற சுந்தரர் தேவாரத்தையும் கொண்டு தமிழர் கலை வளத்தை விளக்கினேன். இச் சங்கம் நடத்தும் பள்ளிக் கூடங்களை யெல்லாம் கண்டு மகிழ்ந்தேன்.

**தமிழ் வேதச் சங்கம் :**

தமிழ் வேதச் சங்கம் என்னை வரவேற்றது. இச் சங்கம் தேவார மயமாக இருந்தது. தேவாரத்திற்கு நாட்டியம் பிடித்தனர். நான் அற்புதத் தேவாரங்களைப் பாடினேன். சம்பந்தர், அப்பர், சுந்தரர் பெருமையை விளக்கி, சைவத்தின் மேன்மையைத் துலக்கினேன்.

**அற்புதம் ஏன்?**

கூட்டம் முடிந்த பிறகு, சில வெள்ளையர் என்னிடம் வந்து "ஏசுநாதரைப் போல் உங்கள் அருட்பெரியாரும் அற்புதம் செய்தனரா? இன்றுதான் நாங்கள் அறிந்தோம். இந்த அற்புதங்கள் எப்படி நிகழ்கின்றன?" என்று கேட்டனர். சிலர், "நாராயண பாபா வந்தார். திருநீறு கொடுத்தார். பிள்ளையார் கொடுத்தார். இன்னொரு பாபா, குங்குமம் எடுத்தார். கனிகள் வரவழைத்தார். இவையும் அற்புதமே" என்றனர். நாம் மூச்சு விடுவதுகூட அற்புதமே. ஆனால், ஓர் அறிவாளி, தன் ஆயுளை எல்லாம், கடவுளுக்கே வழங்கி, அவன் மயமான, ஆன்மாக்களுக்கு, கடவுளன்பை ஊக்குவது, அனைத்திலும் சிறந்த அற்புதமே. தேவாரச் சித்தர் கல்லைத் தெப்பமாக்கினர். நஞ்சை அமுதென உண்டனர். அனல் வாதமும் புனல் வாதமும் வென்றனர். திருநீற்றால், வெப்பு நோய் தீர்த்தனர். இவையெல்லாம் தங்களைப் பெருமை படுத்தச் செய்யும் வித்தைகள் அன்று. இவை, இறைவன் மாண்பை மக்களுக்கு விளக்கும் அற்புதங்களாகும்" என்றேன்.

இன்னொருவர்: "அற்புதம் காட்டாமல் கடவுள் பெருமையை விளக்க முடியாதா?"

நான்: "விளக்கலாம். பாட்டாலும், சொல்லாலும், விளக்கம் செய்யலாம். ஆனால், அற்புதங்களும் உடன் இயன்றால் மக்களுக்கு நம்பிக்கை உண்டாகும். ஆனால், விபூதி வரவழைத்தல், குங்குமம் வரவழைத்தல், கனிகள் வரவழைத்தல்—எல்லாம் தற்பெருமைத் தம்பட்டமாக முடியக்கூடாது. தம்மைப் பற்றியே வாய்ப்பறை முழங்கக்கூடாது. இறைவன் பெருமையைத் தவிர, வேறு பெருமையெல்லாம் சிறுமைதான்.

**சத்திய சாயிபாபா:**

"சத்திய சாயிபாபாவைப் பார்த்தோம். அவர், மழை போலத் திருநீறு கொட்டுகிறார். இலிங்கம் அளிக்கிறார்" என்று பலர் என்னைச் சூழ்ந்தனர்.

நான்: "சத்திய சாயிபாபாவை நான் நன்கு பார்த்திருக்கிறேன். அவருடன் நீண்ட பயணம் செய்திருக்கிறேன். அவர் இலிங்கம் விபூதியுடன் நிற்பதில்லை. அவர் சிறந்த அறிவாளி. பலருக்கு நோய் தீர்க்கிறார். அற்புதமாகப் பேசுகிறார். வேதாகம தருமத்திற்கு, அவர் செய்யும் தொண்டு மிகவும்

அற்புதமானது. ஒவ்வொருவரிடத்திலும், ஒரு சக்தி உள்ளது. அஃது, இறைவனிடமிருந்து வருகிறது. அந்தச் சக்தியால் மக்களை இறைவன்பால் உய்க்க வேண்டும். நமது திருவருட் சமயத்தைப் பரப்ப வேண்டும். மக்களைத் தூய வழியில் நடத்த வேண்டும். சுயநலமற்ற தொண்டு செய்ய வேண்டும். அப்படி யானால், அற்புதங்கள், நல்ல ஆக்கவேலையை ஊக்கும். சத்திய சாயிபாபா, புட்டபர்த்தி, பெங்களூர், சென்னை முதலிய இடங் களில், கல்விக்கும், கலைக்கும் வேதாகம தருமத்திற்கும் அற்புத மான ஆக்கவேலை செய்திருக்கிறார்'' என்றேன். பாபா அன்பர்கள் ஒருநாள், என்னை வரவேற்று, அரிய கருத்துக்களை அறிந்தனர்

## திருக்குறட் சங்கம்

டர்பானில் திருக்குறள் சங்கம் இருக்கிறது. அதை முது பெரும் தமிழர், திரு சுப்பிரமணியனும் மாணிக்கனும், நடத்துகின்றனர். அச் சங்கத்தின் ஆண்டு விழாவிற்கு நான் தலைமை வகித்தேன். திருக்குறளின் உலகப் பொதுமையைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் விளக்கினேன். நான்கு மணி நேரம், திருக்குறள் விளக்கம் நடந்தது. இன்னிசையுடன், திருக்குறள் முழங்கியது. வையத்துள் வாழ்வாங்கு வாழும் வகையினைப் பாட்டுடன் விளக்கினேன். எனது ஆங்கில மொழி பெயர்ப்பைப் பலர் எழுதி வைத்துப் படிக்கின்றனர்.

## தமிழிசைச் சங்கம்

டர்பானில், தமிழ் இசைச் சங்கம் உள்ளது. அநதச் சங்கத் தார் என்னை வரவேற்று என்னுடைய இசைப்பாடல்களைக் கூட்ட மாகக் குரலெடுத்துப் பாடினர். ஆடல் பாடல்களுக்குப் பிறகு, நான் தேவாரப் பண்களைப் பற்றிப் பேசினேன்.

## முனுசாமிப் பிள்ளை விழா

டர்பானில், முனுசாமிப் பிள்ளை என்னும் அரிய தமிழ்ப் புலவர் இருந்தார். அவர் தமிழையும், சைவத்தையும் போற்றி வளர்த்தார். அவர் குடும்பத்தினர் இன்னும் இருக்கின்றனர். அவர்கள் முனுசாமிப் பிள்ளையின் நினைவிற்காக ஒரு பெருங் கூட்டம் நடத்தினர். வள்ளல் வடிவேல் பத்தர் முன்னின்று கூட்டத்தை வெற்றி பெறச் செய்தார். அதில், நான் இன்னி சைக் கருவிகளுடன் மாணிக்க வாசகர் வரலாற்றைச் சொல்லி நட ராஜ தத்துவத்தையும் விளக்கினேன்.

**தீவிர சைவர்**

தீவிர சைவ சங்கம் ஒன்று இருக்கிறது. அச் சங்கத்தார், இலிங்கம், நடராஜா—இரண்டைத்தான் ஒப்புகின்றனர். சிவஞான போதத்தை நன்கு ஓதி, சைவத்தைப் பரப்புகின்றனர். ஒரு நாள், மெய்கண்டார் கண்ட உண்மை என்பதைப்பற்றிச் சிவஞான போத சூத்திரங்களுடன் இரண்டு மணி நேரம் பேசினேன். அன்பர் மகிழ்ந்தனர்.

**வடிவேல் பத்தர்**

"Revelations of Meikandar" (மெய் கண்டார் அருள் விளக்கம்) என்ற ஆங்கில நூலை, டர்பான் அன்பர் மிகச் சிறப்பாக வெளியிட்டனர். இதன் செலவு முழுவதும், வ.ள்ளல் வடிவேல் பத்தர் ஏற்றார். இவர் எனக்குச் செய்த உதவி, மிகப் பெரிதாகும். டாக்டர் தீனதயாளு என்பவர், எனக்கு அழகான நடராஜா திருவுருவைத் தந்தார். அதற்கு வடிவேல் பத்தர், ஒரு பெட்டி செய்து தந்தார். அத்துடன் எனக்கு ஒரு 'ரோமர்' போது காட்டியைத் தந்தார். அவற்றைப் பார்க்கும் போதெல்லாம், அவர் நினைவு வரும். இவ்வாறு பல சங்கங்கள் என்னை வர வேற்றன.

**கோயில்கள்**

கோயில் வரவேற்புகள் புனிதச் சிறப்புடன் நடந்தன. டர்பானில் மிகச் சிறந்த கோயில் வைத்தீசன் கோயில். அந்தக் கோயிலில், இலிங்கம், நடராஜா முருகர், பராசக்தி, இராமர், கண்ணன், அனுமார் ஆகிய எல்லாக் கடவுள் உருக்களுக்கும் வழிபாடு நடக்கிறது. வழிபாடு நடத்தும் அன்பர் சட்டை போட்டுக் கொண்டு நடத்துகின்றனர். தெளிவான தமிழ் நடையில், "கடவுளே பாலை ஏற்றுக் கொள்க; பழத்தை ஏற்றுக் கொள்க; நீரை ஏற்றுக் கொள்க; என்னை ஏற்றுக் கொள்க" என்று சொல்லி மணி அடிக்கின்றனர். இசைக் கருவிகளுடன் தேவாரம் முழங்குகின்றது. இக் கோயிலில், பெரிய மன்றம் உள்ளது. அதில் 2000 பேர் உட்காரலாம். அங்கே என் சொற் பொழிவு நடந்தது. "சைவ சமயம்" என்பது பற்றிப் பேசினேன். சைவ சமயத்தின் தோற்றம், வளர்ச்சி, அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்க வாசகர், காரைக்கால் அம்மையார், நக்கீரர், பட்டினத்தார், வள்ளலார் — போன்ற அருட் பெரியார் பாடல்கள், முப்பொருள் உண்மை ஆகிய பல கருத்துக்களை விளக்கினேன். இடையிடையே இசைக் கருவிகள் தொடர

இசை முழக்கினேன். என்னுடைய பேச்செல்லாம் பதிவாயின. காட்சிகள் எல்லாம் படமாயின. இதே மாதிரி, இராமர் கோயிலில், இராமாயணத்தைப் பற்றிப் பேசினேன். அங்கும் என் இசைப் பாடல்கள் முழங்கின. மாரியம்மன் கோயில் மிகப் பெரிது. அங்கே, காவடி எடுக்கின்றனர். நான் மாரியம்மன் பாட்டும் காவடிப்பாட்டும் ஆவேசமாகப் பாடி, சைவ தத்துவத்தையும் விளக்கினேன்.

இந்தக் கோயில் மன்றத்தார் எனது மந்திரமாலையை வெளியிட ஏற்பாடு செய்துள்ளனர். இவ்வாறு சங்கங்களிலும் கோயில்களிலும் தொண்டு செய்து மகிழ்ந்தேன். அந்த மகிழ்ச்சிக் கெல்லாம் அடிப்படையாய் இருந்தது சைவ சித்தாந்த சங்கமே. பிறமொழிக் கழகங்களைப்பற்றி இனிக் காண்போம்.

(தொடரும்)

---

## தருணமிதே

*சாதியிலே மதங்களிலே சமபநெறி களிலே*
*சாத்திரச்சந் தடிகளிலே கோத்திரச்சண் டையிலே*
*ஆதியிலே யபிமானித் தலைகின்ற வுலகீர்*
*அலைந்தலைந்து வீணேநீ ரழிதலழ கலவே*
*நீதியிலே சன்மார்க்க நிலைதனிலே நிறுத்த*
*நிருத்தமிடுந் தனித்தலைவ ரொருத்தரவர் தாமே.*
*வீதியிலே யருட்சோதி விளையாடல் புரிய*
*மேவுகின்ற தருணமிது கூவுகின்றே னுமையே.*

—இராமலிங்க அடிகள்.

## என் கடன் பணி செய்து கிடப்பதே

*நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்*
*தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்*
*தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்*
*என்க டன்பணி செய்து கிடப்பதே.*

—அப்பர் : 5 : 192.

# சிலப்பதிகார ஆராய்ச்சி

## 8. செங்குட்டுவன்

[புலவர் இரா. இளங்குமரன்]

குட்டுவன் என்பது குடிப்பெயர்; செம்மை என்பது அடைமொழி. இவ் வடைமொழி வண்ணம் பற்றியதா? தன்மை பற்றியதா? இதனை ஆராய்வதே இக் கட்டுரை.

*"செம்மை சிறுமை சேய்மை தீமை*
*வெம்மை புதுமை மென்மை மேன்மை*
*திண்மை உண்மை நுண்மை இவற்றெதிர்*
*இன்னவும் பண்பிற் பகாநிலைப் பதமே"* —நன். 135.

என்பது பண்புப் பகாநிலைச் சொற்கள் பற்றிய நூற்பா. இந் நூற்பாவிற்கு உரை வரைந்த பெருமக்கள் செம்மைக்குக் கருமை வெண்மை முதலியவற்றை எதிர்ச்சொல் எனக் காட்டினர். இவை 'இன்னவும்' என்பதனுள் அடங்கும். கருமை முதலிய நிறங்கள் செம்மை போன்றனவே அன்றி எதிரிடையானவை அல்ல என்பது எவரும் அறிந்ததே. சிறுமைக்குப் பெருமையும், சேய்மைக்கு அண்மையும், தீமைக்கு நன்மையும் போலத் தன்மையால் எதிரிட்டவை அல்ல, கருமை முதலியவை. 'செம்மை'யின் எதிர்ச்சொல் 'கொடுமை' என்பதாம். செங்கோல், கொடுங்கோல் என்பவற்றை அறிக.

செம்மையாவது நேர்மை; வளையாத் தன்மை.

*"ஆகாத் தோம்பி ஆப்பயன் அளிக்கும்*
*கோவலர் வாழ்க்கையோர் கொடும்பா டில்லை"*
—சிலப். 15 : 120-121.

என்பது அடிகள் வாக்கு. கோவலர் கைக்கண் உள்ள கோல் ஒரொருகால் ஆக்களை அலைப்பது ஆகலின்,

"கொடுங்கோல் கோவலர்"—(முல்லைப்பாட்டு) என்கிறார் நப்பூதனார். இனி அவர் கைக்கோல் வளைவுடையது என்பதைச் சுட்டுவதுமாம்.

செம்மை செவ்விய தன்மையாம் நேர்மை ஆகலின், 'நடுவு நிலைமை' என்பதாம். நடுவு நிலைமையாவது ஒருபால் கோடாமை.

"சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி"

என்னுங் குறண்மணி நடுவு நிலைமையை உவமையால் நன்கனம் வலியுறுத்தும். மேலும்,

"நெடு நுகத்துப் பகல்போல
நடுவுநின்ற நன்னெஞ்சினோர்"

என்னும் கடியலூர் உருத்திரங் கண்ணனார் வாக்கும்;

'நுகத்துப் பகலாணி அன்னான்'

என்னும் பொய்யா மொழியார் வாக்கும்;

'செம்மையின் ஆணி'

என்னும் கம்பன் வாக்கும் காணத் தக்கன.

ஒருபால் சாயாத நடுவு நிலைச் செம்மை; 'செப்பம்' எனவும் பெறும்; செப்பம் உடையான் 'செவ்வியான்' எனப் பெறுவான்.

"சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா
உட்கோட்டம் இன்மை பெறின்"

என்றும்,

"செப்பம் உடையவன் ஆக்கம்,"

என்றும்,

"செப்பமும் நாணும் ஒருங்கு"

என்றும்,

"செவ்வியான் கேடும்"

என்றும் வரும் குறண்மணிகளைத் தெளிக.

நேர் கிழக்கைச் 'செங்குணக்கு' என்றும், சரிவின்றி நிமிர்ந்தெழுந்துள்ள மலையைச் 'செங்குன்று' 'செங்கோடு' என்றும், நேரிய கூரிய அம்பைச் 'செங்கோல்' என்றும், நேரிய பார்வையைச் 'செந்நோக்கு' என்றும், இருவகை வழக்கினும் உண்மை காண்க. இவற்றை நோக்கச் 'செங்குட்டுவன்' என்பது செவ்விய — நேரிய—நடுவுநிலை போற்றிய குட்டுவன் என்பது போதரும். அகச்சான்று காட்டின் அன்றோஏற்கும் எனின் காட்டுதும் :

(1) மதுரைச் சாத்தனார் மலைநாட்டுக்குச் சென்று செங்குட்டுவனைக் கண்டு கோவலற்கு உற்றதும், கண்ணகி வழக்கும், தென்னவர் கோமானும் தேவியும் பட்டதும், கண்ணகி மலைநாட்டுக்கு வந்ததும் ஆகிய செய்திகளை ஒழிவின்றி உரைத்தார். அதனைக் கேட்டவுடன்,

> *"எம்மோ ரன்ன வேந்தற் குற்ற*
> *செம்மையின் இகந்தசொற் செவிப்புலம் படாமுன்*
> *உயிர்பதிப் பெயர்த்தமை உறுக வீங்கென*
> *வல்வினை வளைத்த கோலை மன்னவன்*
> *செல்லுயிர் நிமிர்த்துச் செங்கோல் ஆக்கியது"* —25 - 95 - 9

என்று செங்குட்டுவன் கூறும் உரைமணி அவன் செங்கோல் தெய்வத்திற்குத் தலை வணங்கித் தாழாத் தொண்டியற்றும் தனிப்பேரடியான் என்பதைத் தெள்ளிதின் விளக்கும்.

(2) மேலும், பாண்டியன் தான் செய்த பழிக்குக் கழுவாய், தானே தேடிக்கொண்டதை வியந்து பாராட்டும் செங்குட்டுவன், ஆள்வோருக்கு உண்டாம் அல்லல்களைக் கூறுமுகத்தான் தன் செங்கோல் நாட்டச் சீர்மையைப் புலப்படுத்துகின்றான்.

> *"மழைவளங் கரப்பின் வான்பேர் அச்சம்*
> *பிழையுயிர் எய்திற் பெரும்பேர் அச்சம்*
> *குடிபுர வுண்டுங் கொடுங்கோல் அஞ்சி*
> *மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்*
> *துன்ப மல்லது தொழுதக வில்"* —25 - 100 - 4

என்பது அவன் வாக்கு.

(3) இனி, வட நாட்டின்கண் நிகழ்ந்த திருமண நிகழ்ச்சி ஒன்றில் நாவினைக் காவாக் கனகன் விசயன் முதலாயவர், 'தென்னாட்டு வேந்தர் இமயத்தில் இலாஞ்சினை பொறித்த நாளில் எம்போலும் வேந்தர் ஈங்கில்லை போலும்' என்றுரைத்த மொழியைத் துறவோர் வழியாகக் கேள்வியுற்ற செங்குட்டுவன், வடநாட்டின்மேற் படைகொண்டு செல்ல விழைந்திருந்தான். அவ் விழைவைப் 'பத்தினிக் கற்கோள்' விரைந்து தூண்டிற்று. வஞ்சினங் கூறி வடநாட்டுச் செலவு மேற்கொள்கின்றான் செங்குட்டுவன்.

வஞ்சினமாவது நெடுமொழி. 'இன்னது பிழைப்பின் இதுவா கியர்எனத் துன்னருஞ் சிறப்பின் வஞ்சினம்' (தொல். புறத். 24.) என்னும் சிறப்புடையது வஞ்சினம். உயிரெனப் போற்றும் ஒன்றையோ பலவற்றையோ சுட்டிக் கூறி வஞ்சினம்

கூறப்பெறும் என்பதை இலக்கியம் கற்ற எவரும் அறிவர். அவ்வாருகச் செங்குட்டுவன் கூறும் வஞ்சின மொழி யாது?

*"கடவுள் எழுதவோர் கற்கொண் டல்லது*
*வறிது மீளுமென் வாய்வாள் ஆகிற்*
*செறிகழல் புனைந்த செருவெங் கோலத்துப்*
*பகையரசு நடுக்காது பயங்கெழு வைப்பிற்*
*குடிநடுக் குறூஉம் கோலேன் ஆகென"* — 26 . 14 - 18.

முழங்குகின்ருன். 'குடிநடுக் குறூஉம் கோலே' எவ்வளவு கொடுமையாகக் கருதினன் செங்குட்டுவன் என்பதை விளக்க வேறு சான்று வேண்டுவ தின்ரும்.

(4) இனிச் செங்குட்டுவன் வடநாட்டுச் செலவினை மேற் கொண்டு கங்கைக் கரைக்கண் இருந்த காலையில், தென்னட்டி னின்று போந்த மாடலன் என்னும் மறையோன் பாண்டிநாட்டு நிலைமையையும், சோணுட்டுச் செய்தியையும் தானே விரித்துரைக் கின்ருன். பொழுது போய பின்னர்ச் செங்குட்டுவன் மாடலனை மீண்டும் தானே அழைத்து,

*இளங்கோ வேந்தர் இறந்த பின்னர்*
*வளங்கெழு நன்னட்டு மன்னவர் கொற்றமொடு*
*செங்கோற் றன்மை தீதின் ருேவென* (27 : 159-61)

வினவுகின்ருன். தன் மைத்துன வளவனுக்கு இருந்த தாய வுரிமைப் போரைத் தகர்த்து அரசாக்கி நிறுத்தியவன் செங்குட் டுவன். அச் செயல் முடித்த பின்னர் வடநாட்டுச் செலவு மேற் கொண்டான். ஆகலின் அச்சோணுட்டுச் 'செங்கோற் றன்மை தீதின்ருே' என வினவுகின்ருன். இவ்வினவினல் தன்னட்டில் மட்டுமன்றி எந்நாட்டிலும் செங்கோற் றன்மை சீருற விளங்க அவாவியவன் செங்குட்டுவன் என்பது விளக்க மாம்.

(5) செங்குட்டுவன் மலைவளங் காணச் சென்ற காலையில் 'ஏழ்பிறப் படியோம் வாழ்கநின் கொற்றம்' என வீழ்ந்து வணங் கிய குன்றக் குறவர், 'கான வேங்கைக் கீழ் நின்ற காரிகை வானம் போகிய' இறும்பூது நிகழ்ச்சியைக் கண்டவாறு கூறி னர். கலங்கி நின்ற அக்காரிகை சேரநாட்டைச் சேர்ந்தவ ளாக இருப்பாள் என்னும் ஐயம் சிறிதும் அவர்கட்கு உண்டாக வில்லை. சேர நாட்டகத்து இவ்வாறு 'அல்லற் பட்டு ஆற்ருது' அழுங்குவார் இலர் என்று உறுதியாகக் கருதினர். ஆகவே,

"எந்நாட் டாள்கொல் யார்மகள் கொல்லோ
நின்னாட் டியாங்கண் நினைப்பினும் அறியோம்" (25 : 65-6)

என்றனர். குன்றுவாழ் மக்களே கோன்முறை கோடாக் கோன்மை தம் நாட்டில் நிகழ்வதாகக் குறிக்கொண்டு வாழ நெறிப் படுத்திய காவலன் செங்குட்டுவன் என்னின் அவன் செங்கோற் சீர்மைதான் என்னே!

(6) வஞ்சி மூதூரில் மகிழ்ந்திருந்தான் குட்டுவன். அப்பொழுது எழுந்த முழுமதியைக் கூறவந்த அடிகட்குக் குட்டுவன் குடிபுறந் தரும் கோன்மையே முன்னின்றது. ஆகலின்,

"முடிபுறம் உரிஞ்சுங் கழற்கால் குட்டுவன்
குடிபுறந் தருங்கால் திருமுகம் போல
உலகுதொழத் தோன்றிய மலர்கதிர் மதியம்" (28 : 37-39)

என்றார். செங்குட்டுவன் குடிபுறந் தருஉம் செங்கோன் மையை விளக்கும் உவமை யாகலின் கருதத் தக்கதாம்.

(7 - 8) செங்குட்டுவனை விளியாக 'அறக்கோல் வேந்தே' (28 : 96) என்றும், 'செங்கோல் வேந்தே' (28 : 157) என்றும் அடிகளார் கூறியுள்ளமையும், அவன் அவையத்தைச் 'செங் கோல் வேந்தன் திருவிளங்கு அவையம்' (26 : 144) என்று கூறியுள்ளமையும் நோக்குதற் குரியன.

(9) செங்குட்டுவற்கும் இளங்கோவடிகட்கும் உழுவ லன்பு பூண்ட முத்தமிழ் ஆசான் சாத்தனார், மணிமேகலை வஞ்சி மாநகர் புக்க காலையில் ஆங்கு ஆட்சி புரிந்தவன்.

"செங்குட்டுவன் எனும் செங்கோல் வேந்தன்" (26 : 77)

என்று குறிக்கின்றார். இவ்வாற்றால் எல்லாம் செங்குட்டுவன் செங்கோற் குட்டுவன் என்பதும், அவன் செங்கோற் சீர்மையே அடைமொழியாய் நிலைபெற்றது என்பதும் தெளிவாம்.

இஃதிவ்வாறாக, 'நம் சேரல் பெருந்தகை குட்டுவன் எனத் தனித்தும் வழங்கப்படுவன்; இவனுக்குரிய அடைசொல்லாகிய செம்மை இவனது நிறம்பற்றி வழங்கப்பட்டதாகும். இது பற்றியே, மணிகுட்டுவன் என்றும் இவன் வழங்கப் பெற்றவன் என்று சாசனமொன்றால் தெரிகின்றது.' எனச் சேரன் செங் குட்டுவன் ஆசிரியர் மு. இராகவ ஐயங்கார் கூறியுள்ளார். மேலும் 'நாமக்கல் சாசனத்தில் சேரரின் முன்னோருள் 'மணி

குட்டுவன்' என்பவனும் ஒருவனாகக் காணப்படுகின்றான்' என்றும், அவன் நன்னூல் மயிலைநாதர் உரையில் காட்டப் பெறும் திருமணக் குட்டுவன் ஆகலாம் என்றும், மணக்குட்டுவனே மணிக் குட்டுவன் என்று கொள்ளத்தகும் என்றும், அதற்கு மணித் தக்காளி மணத் தக்காளி என வழங்குவது சான்று என்றும் மணி என்பது ஈண்டுச் செம்மணியான மாணிக்கமாம் என்றும் கூறியுள்ளார். புறச்சான்றுகளைத் தேடிப் படைத்துச் செங்குட்டுவன் பெயர்க்கு ஆக்கி நிறத்திற்கு நிறுவுதலினும் அகச் சான்றுகள் நிரம்பிக் கிடக்கும் நேர்மை அடையைப் புறக்கணிக்க இயலாது என்பதறிக.

மணிக்குட்டுவன் அல்லது மணக்குட்டுவன் செங்குட்டுவனே என்பதைத் தக்க சான்று இன்றிக் கொள்ளுதற்கு இயலாது. அதனையே கொள்ளுதற் கியலாத போது அவன் நிறத்தைக் கோடல் என்பது சிறிதும் இயலாததாம்.

இனி, 'மணி' என்பது செம்மணி என்று மட்டும் குறிக்கும் என்பதன்று. அது செம்மணியையும் குறிக்கும். கருமணியையும் நீலமணியையும் பச்சைமணியையும் பிறமணிகளையும் குறிக்கும்.

'மணிவண்ணன்' என்பது திருமாலைக் குறிக்கும் பெயர்களுள் ஒன்று. 'மணி' ஆண்டுச் செம்மணியாமோ? அது கருமணியாம்! 'கருமணியைக் கண்டு கொண்டேன்' "கருமணியைக் கோமளத்தை" என்பது ஆழ்வார் உரைமணிகள். கருமணியிற் பாவாய்' என்பது வள்ளுவர் வளமணி. ஆகலின் 'மணி' செம்மணி என்றே கோடல் சால்பன்று; இடத்தையும் பொருளையும் கருதி ஏற்ற பொருள் தருவதாம் அது. அவ்வாறாகக் குட்டுவனின் உடன் பிறந்தாராய அடிகளாரோ உழுவலன்பராய சாத்தனாரோ, தன் மைந்தன் குட்டுவஞ் சேரற்கு நல்லாசிரியராகத் தேர்ந்து கொண்ட ஐந்தாம் பத்துப் பாடிய பரணரோ செங்குட்டுவன் நிறத்தை அடைமொழியால் கூட - உவமையால் கூட - காட்டினர் அல்லர். செங்கோற்றன்மையைச் செம்மாந்து பல் கால் பாராட்டியுள்ளனர். ஆதலால் செங்குட்டுவன் நிறம் செம்மை, கருமை இவற்றுள் யாதாயினும் ஆகுக! அஃதவற்குப் பெருமை தரும் ஒன்றன்று. அவன் செங்கோன்மையே உண்மைச் சான்றுடையதும் பெருமை மிக்கதும் ஆம் என்க!

'நிற அடை' என்றால் தான் அவன் பிள்ளைமைப் பருவத்தே இடம்பெற்றிருக்கக் கூடும். தன்மை அடை எனின்

அரசேற்று நாடெல்லாம் செங்கோற்றன்மை பெருகப் பரவிய பின்னரே ஏற்பட்டிருக்கக்கூடும் என்று எண்ணிப்பார்க்க வேண்டுவதும் முறைமை. அதற்குத் தக்க குறிப்பொன்றும் உள்ளது.

பதிற்றுப்பத்தில் உள்ள ஐந்தாம் பத்து பரணரால் பாடப் பெற்றது. செங்குட்டுவனைப் பற்றியது அது. அதில் செங் குட்டுவன் ஐந்து இடங்களில் (42, 43, 46, 47, 49) குட்டுவன் என்றே குறிக்கப் பெற்றுள்ளான். செங்குட்டுவன் முற்பகுதி வரலாற்றைக் கூறுவது பதிற்றுப்பத்து என்பதும், பிற்பகுதி வரலாற்றைக் கூறுவது சிலப்பதிகாரம் என்பதும், இவ்விரண் டையும் தொகுத்துச் சுட்டுவது பதிற்றுப் பத்து ஐந்தாம் பதிகம் என்பதும், 'கிழவர் இளங்கோ' என்னும் எம் 'சிலப்பதிகார ஆராய்ச்சி' முதற்கட்டுரைக் கண் குறிக்கப் பெற்ற செய்தி இவண் நோக்கத் தக்கதாம்.

குட்டுவன் என்னும் குடிப்பெயர் தாங்கியவன் தன் செங் கோற் சீர்மையால் செங்குட்டுவன் ஆகிப் புலவர் பாடும் புகழாளனாகத் திகழ்ந்தான் என்பது உறுதியாம். காந்தி என்று அழைக்கப் பெற்ற பெரியார் பின்னை நாளில் 'மகாத்மா காந்தி' என்று போற்றப்பெற்றமை கண்கண்ட சான்று அன்றோ !

---

## செங்குட்டுவனின் மறனிழுக்காமானம்

*கண்ணகிக்குக் கல்கொணர நேர்ந்தபோது, செங்குட்டு வன்,*

*"இமையத் தாபதர் எமக்குஈங் குணர்த்திய*
*அமையா வாழ்க்கை அரைசர் வாய்மொழி*
*நம்பால் ஒழிகுவ தாயின் ஆங்கஃது*
*எம்போல் வேந்தர்க்கு இகழ்ச்சியும் தரூஉம்"*

*என்று கூறி மறனிழுக்கா மான முடைமையைப் புலப்படுத்து கிறான்.*

*(சிலப்பதிகார ஆராய்ச்சி பக். ௩௧)*

# குறுந்தொகையும் குடும்ப விளக்கும்

[நெல்லை. ந. சொக்கலிங்கம், எம். ஏ.

ம. தி. தா. இந்துக்கல்லூரி, நெல்லை-10.]

அவளுக்குத் திருமணம் ஆகித் திங்கள் சில சென்றிருந்தன. கொண்டவனின் குலவிளக்காய், அவன் உள்ளத்து உணர்வுகளை அறிந்து உணர்ந்து செயலாற்றும் பண்பும் பக்குவமும் நன்கு பெற்றுவிட்டாள். மனைத்தக்க மாண்புடையளாக அவள் வாழ்வு அமைந்து சிறந்தது. தற்கொண்டான் பேணித் தகைசான்ற சொற்காத்துச் சோர்வில்லாத சுடர்க் கொடியாய் விளங்கினாள். இந்நிலையில், தன் உயிரனைய மகள் எவ்வாறு இல்லறம் நடத்துகின்றாள் என அறிந்து கொள்ள அவள் தாய்க்குப் பேராவல். எனவே, அந்தத் தாய் தன் தோழியை (செவிலித்தாயை), மகள் இல்லத்திற்குச் சென்று கண்டு வருமாறு அனுப்பினாள். அதன்படி அருமைமிக்க மகளின் இல்வாழ்வை நேரிற்கண்டு வந்து, அவள் தாயிடம் செவிலித்தாய் சீராகச் சொல்லுகின்றாள். அதனைக் காண்போம்.

கணவனின் விருப்பமும் கருத்தும் அறிந்து நாடோறும் உணவாக்குகின்றாள் அக்காரிகையாள். தன் தலைவனுக்கு வேண்டியவற்றை அவன் மகிழ்ந்துண்ணுமாறு சமைப்பதில் மட்டிலா மகிழ்ச்சி கொள்கின்றாள். செவிலி சென்ற நேரம் அவள் மதியவுணவு சமைக்கும் நேரம். அன்று அப்பெண் வண்ணச் சேலையுடுத்திக் கண்ணுக்கு மைதீட்டிக் கருத்துக்குப் புதுமையூட்டித் தோன்றினாள் பறந்து பறந்து அவள் சமைக்கின்றாள். அதனைக் கண்ட செவிலி மிகவும் மகிழ்ந்தாள். அப்போது, நன்றாக முற்றிய தயிரைக் கொண்டு புளிக்குழம்பு ஆக்க முனைகின்றாள் அத்தலைவி. காந்தள் மலர்களை ஒத்த மெல்லிய விரல்களால் தயிரை நன்கு பிசைகின்றாள். தயிரைப் பிசைந்த கையைத் தன் வண்ணச் சேலையிலேயே துடைத்துக் கொள்கின்றாள். அதனால் அச்சேலையில் அழுக்குப் படிந்தது; அழுக்குப் படிந்து விட்டதற்கு அத்தலைவி கொஞ்சம் கூடக் கவலை கொள்ளவில்லை. விரைவாகச் சமையலை முடித்து வைக்க வேண்டும் என்று அவள் எண்ணினாள். அதனால் அழுக்குடைய சேலைப்பகுதியைத் துவைத்துக் கட்டவும் அவள் கருதவில்லை. பிசைந்த தயிர் உள்ள பாத்திரத்தை அடுப்பிலேற்றித் தாளிதம் செய்கின்றாள்; தாளிப்பினது புகை மண்டுகின்றது;

மை தடவிய தடங்கண்களில் கண்ணீரும் குப்பென்று பரவிய புகையினால் உண்டாயிற்று. ஆனால், அவளோ, தன் ஒரு கையினால் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு ஒரு வகையாகக் குழம்பும் ஆக்கிமுடித்து விட்டாள். சமையலை முடித்து விட்டாள் ஒருவாறு.

அவள் கணவன் வினை முடித்து வீடு நோக்கி வந்தான். தானே முயன்று அழகாகச் சமைத்த உணவைப் பரிமாறினாள் தன் அருமை நாயகனுக்கு. அவன் அப்புளிக் குழம்பின் இனிய சுவையினைச் சுவைத்துச் சுவைத்து மிகவும் மகிழ்ந்து உண்டான். அவளே முயன்று செய்த உணவினை, அவன் இனிதென மகிழ்ந்து உண்ணுவது கண்ட அவளுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை எனலாம். அம் மகிழ்ச்சியின் சாயல் அவள் முகத்தில் மெல்லப் படர்ந்து ஒளிவிட்டது. அந்நேரத்தில் அப் பெண்கொடியாள், தான் பட்ட தொல்லைகளை எல்லாம் மறந்து மகிழ்ச்சி வெள்ளத்தில் நீந்திக் கொண்டிருந்தாள். இந்த இனிய நாடகத்தைக் கண்கொட்டாமல் கண்டு மனத்தில் பதித்தாள் செவிலி. தான் அவளை வீட்டில் கண்டு சுவைத்த இனிய இல்லறக் காட்சியை அவளைப் பெற்ற தாயிடம் கூறி மகிழ்கின்றாள். இவ்வினிய காட்சியைச் சொல்லோவியமாக்கி நிறுத்துகின்றார் குறுந்தொகைப் புலவர் கூடலூர் கிழார் என்பவர்.

*"முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்*
*கழுவுறு கலிங்கம் கழாஅ துடீஇக்*
*குவளை யுண்கண் குய்ப்புகை கமழத்*
*தான்துழந் தட்ட தீம்புளிப் பாகர்*
*இனிதெனக் கணவன் உண்டலின்*
*நுண்ணிதின் மகிழ்ந்தன் றொண்ணுதல் முகனே"*

—(குறுந் : 167)

இச் சங்கத் தலைவியைப் போலவே நடுத்தரக் குடும்பத்தில் தோன்றிய நற்கவிஞரென நாடும் ஏடும் போற்றும் சிறப்புக் கொண்ட பாரதிதாசனாரும், 'குடும்ப விளக்கு' என்னும் புதுமைக் காப்பியத்தின்கண் குடும்பத்தலைவியைக் காட்டிச் செல்கின்றார்.

குடும்பவிளக்கில் வரும் குடும்பத்தலைவி காலை நான்கு மணிக்கே எழுந்து, காலைக் கடன்களை முடித்து, குழந்தைகளைக் குளிக்கச் செய்து, கொண்டவன் மகிழப் பேணி வாழ்கின்றாள். அவளுக்கு அருமைப் பரிசு நல்குவான் போலே கதிர்க்கைகளை

நீட்டி ஒளி வழங்கினான் கதிரவன். குழந்தைகளைச் சீருடை அணிவித்துச் சீரோடு பள்ளிக்கு அனுப்பி வைத்தாள் அப் பெண் கொடி. அதனையடுத்துக் கணவனுக்கு வேண்டிய பணி விடை செய்து முடித்தாள். அனைவரும் சென்ற பின்னரே அவள் காலை உணவு உண்டாள். கணக்காய்க் காய்கள் வாங்கி வந்தாள். மதிய உணவு சமைக்க முற்படுகின்றாள் இத்தலைவி. இந்நேரம், பழைய குறுந்தொகைத் தலைவி நம் நினைவில் வந்து நிற்கின்றாள்.

குடும்பவிளக்கின் சுடரொளியாய்த் துலங்கிடும் மங்கை நல்லாள், சமையலின் புதுமை தேர்ந்து தெளிந்தவள். தம் இல்லத்திற்கு வந்த விருந்தினரிடம் கலந்து பேசும் போது,

*'சமையலில் புதுமை வேண்டும் !*
*சமையல்நூல் வளர்ச்சி வேண்டும் !*
*சமையற்குக் 'கல்வி இல்லம்'*
*அமைந்திட வேண்டும் யாண்டும் !*
*அமைவிலாக் குடும்பத் துள்ளும்*
*அகத்தினில் மகிழ்ச்சி வேண்டில்*
*சமையலின் திறமை வேண்டும்*
*சாக்காடும் தலைகாட் டாதே !'*

(குடும்பவிளக்கு - இரண்டாம் பகுதி)

எனப் பேசி மகிழும் இனியள் ! வீட்டு நலம் பேணும் தனியள் ! அவள் தன் மனங்கொண்டிருக்கும் மணவாளனுக்கும் தன் அன்புச் செல்வங்களுக்கும் உணவாக்கத் தொடங்குகின்றாள். அவ்வமயம், அவள் நினைப்பில் தான் முயன்று சமைத்த உணவினை இனிதென உண்டு மகிழ்ந்த இனிய காட்சி மனக்கண் முன் வந்து தோன்றுகின்றது.

பொன்னும் பொருளும் அவளுக்குப் பெரிதில்லை ; தன்னைக் கைபிடித்த கணவனின் அருளையே உயிராய்க் கொண்டு போற்றும் உள்ளப் பண்புடைய சீரிய குடும்பத் தலைவி ஆவாள் ! தன் கணவனுக்கு உருளைக் கிழங்கினைக் கொண்டு துணைக்கறி சமைத்தால், அவன் விரும்பி மகிழ்ந்து உண்பான் என்று அவள் நன்கு அறிவாள். அவன் மேல் அளவிறந்த அக்கறை கொண்டுள்ள அவள், அடுப்பில் உருளைக் கிழங்கினை வைத்து அருமையான துணைக்கறி சமைத்தனள். பல்முறை இவ்வாறு சமைத்து வைத்த போது அவன் இனிதென மகிழ்ந்துண்ட இனிய காட்சியை இவள் நேரில் கண்டு மகிழ்ச்சியுற்றவள். அதே போல இன்றும் அவள் மகிழ விரும்பினாள். எப்படித் தெரியுமா? பழைய கூடலூர்கிழார் கூறியபடி,

'நுண்ணிதின் மகிழ்ந்தன் றொண்ணுதல் முகனே !' என்ற வாறு மகிழ்ந்தனள். அவர் வழி வந்த பாரதிதாசனார்,

'செவ்விள நகைசெய் கின்றாள்'

என்று குடும்பவிளக்குத் தலைவியைக் குறிப்பிடுகின்றார். பிற ருக்குப் பெரிதும் புலப்படும் வண்ணம் வாய்விட்டுச் சிரித்தால், அதில் அவள் தருக்கும் செருக்கும் உடையவள் என்று எண்ண இடமேற்படுமன்றோ? அதனால் தான் 'செவ்விள நகை செய் கின்றாள்' என்று கூறினார்.

கூடலூர் கிழார் காட்டிய குறுந்தொகைத் தலைவியைப் போலவே, பாவேந்தர் பாரதிதாசனாரின் தலைவி,

'பொருளையும் பெரிதென் றெண்ணாள் ;
  பூண்வேண்டாள் ; தனைம ணந்தோன்
அருளையே உயிரென் றெண்ணும்
  அன்பினால், வறுத்தி றக்கும்
உருளைநற் கிழங்கில், தன்னை
  உடையானுக் கிருக்கும் ஆசைத்
திருவுளம் எண்ணி எண்ணிச்
  செவ்விள நகைசெய் கின்றாள்'

(குடும்பவிளக்கு - முதற்பகுதி)

என விளங்குகின்றாள். இவ்வாறு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர் விளங்கிய சங்கத்தலைவியின் இல்லற நெறியை, இக் காலக் குடும்பவிளக்குத் தலைவியிடமும் காணமுடிகின்றது. இவ்வொப்புமையைக் காணும்போது கொள்ளை இன்பம் ஏற் படுகின்றது.

---

## வாழ்க்கைத் துணைநலம்

மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை. —குறள், 51

தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண். —குறள், 58

# கவிதையில் குறிப்புப் பொருள்

[செஞ்சொற் கொண்டல், புலவர், டாக்டர்
சோ. சிங்காரவேலன் M. A., Dip. Ling., Phd.,
*தமிழ்த் துணைப் பேராசிரியர், அ. வ. அ. கல்லூரி, மாயூரம்*]

**அநுபவ வெளியீடே கவிதை :**

தான் அடைந்த ஓர் ஒப்பற்ற அநுபவத்தை மற்றவரும் அடைய வேண்டும் என்று எண்ணுகின்ற அழகிய உள்ளத்தின் வெளிப்பாடே கவிதை என்று கூறலாம். ஏதோ ஒன்று தன்னுடைய ஆழ்ந்த உள்ளத்தின் நோக்கில் தட்டுப்பட்டதும், அதனை வெளிக் கொணர்கின்றான் கவிஞன் என்ற படைப்புக் கலைஞன். அவன் கொணர்வது சில வேளைகளில் விலை மதிப்பற்ற மாணிக்கம்போல ஒளி வீசுகின்றது. அதன் ஒளி கருதுவோர் சிந்தையெலாம் பாய்ந்து கதிர் பரப்புகின்றது. கண்டவர் வியக்கும் கற்பனை வண்ணம் அவ்வொளிச் சிதறலில் பட்டொளி வீசுகின்றது. 'இப்படி ஓர் உயர்ந்த கருத்தா', 'இப்படி ஓர் உயர்ந்த அநுபவமா' என்றெல்லாம் நினைக்கின்ற மனம் கேட்டுக் கேட்டு இன்புறுமாறு சில வெளியீடுகள் அமைந்துவிடக் காணலாம்.

**காலம் கடந்த நிலை :**

எல்லா மனிதர்க்கும் இத்தகைய மதிப்பும் திறனும் உண்டா? ஏதோ நூற்றில் ஓரிருவர்க்கு மட்டுமே இவ் வியத்தகு திறன் விளைந்திடக் காணலாம். இஃது எம்மொழிக்கும் பொது ஆகும். அநுபவம் உடையார் நாடு, மொழி எல்லைகளுக்கு அப்பாற்பட்டவர் அன்றோ? இவர்கள் காலத்தை வென்று நிற்கும் கலை வெளியீடு பெற்றுள்ளமையின் காலத்தைக் கடந்து நிற்கும் கலைஞர் ஆகக் கருதப் பெறுகின்றனர். இவர்கள் படைப்பும் அழிந்தொழியும் உலகில் அழியாத வாழ்வு பெறுகின்றது; 'தெய்வீகப் படைப்பு' என்று இத்தகு மாந்தர் அரும்படைப்புக்களைக் கூறிப் போற்றுகின்றோம்; கூறிக் கூறி மகிழ்கின்றோம்.

**படைப்புக் கடவுளும் படைப்புக் கலைஞரும் :**

பிரமனும் படைப்புக் கடவுள்தான். இத்தகையோரும் படைப்புக் கலைஞர்கள்தாம். இவ்விருவருடைய படைப்புககளையும் ஒப்பிடுகின்றார் உயர்ந்த அருட்புலவராகிய குமரகுருபர அடி

களார். 'பிரமன் புலவர்க்குச் சிறிதும் ஒப்பாக மாட்டான்' என்று முடிவு கட்டுகின்றார். பிரமன் படைக்கும் உடம்புகள் சதையும், குருதியும் நரம்பும் கூடிய வெற்றுடம்புகள். ஆனால் புலவர்கள் படைக்கும் உடம்புகளோ சாவா மூவாப் புகழ் படைத்தவை என்பது அடிகளார் காட்டும் காரணம் ஆகும். இத்தனைக்கும் கலைமகள் வாழ்க்கை பிரமன் நாவின் கண்ணது; புலவர்களோ கலைமகளின் தண்ணருள் மட்டுமே பெற்றவர்கள் ஆவர்.

> "கலைமகள் வாழ்க்கை முகத்த தெனினும்
> மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான் —மலரவன்செய்
> வெற்றுடம்பு மாய்வனபோல் மாயா புகழ்கொண்டு
> மற்றிவர் செய்யும் உடம்பு"

என்பது குமரகுருபர அடிகளாரது அற்புதமான கவித்தீர்ப்பு. பெருங்காப்பிய மாந்தர் பலரைப் படைத்த பெருங்கவிஞர் யாவரும் இப்போது நம் நினைவிற்கு வருவர். கம்பனின் இராமன், சீதை, அநுமன் முதலியோரும், இளங்கோவடிகளின் கண்ணகி, கோவலன், பாண்டியன் நெடுஞ்செழியன் முதலியோரும், சாத்தனாரின் மணிமேகலை, உதயகுமரன், அறவணர் முதலியோரும், சேக்கிழாரின் அறுபான் மும்மை நாயன்மார்களும், திருத்தக்க தேவரின் சீவகன், கட்டியங்காரன் முதலியோரும் உயிருள்ள மாந்தர் போன்று நம்மிடையே நடமாடுவோராவர்.

இவ்வாறு நம் நெஞ்சையெல்லாம் கவரும் மாந்தர் பலரையும் படைத்து உருவாக்கும் அற்புதக் கலைஞர் ஆகிய கவிஞர்கள் தம் படைப்பிற்குக் கையாளும் கருவிகள் தாம் யாவை? நாமெல்லாம் நன்கு அறியத்தக்க சொற்களே. இனிய பொருள் நோக்கிற்கு அடிப்படையாக உள்ள தகுந்த சொற்களை அவர்கள் தேர்ந்தெடுக்கின்றனர். அவற்றினை இனிய ஓசை ஒழுங்கிற் கேற்ப நிரல் படுத்துகின்றனர். அழகான பாட்டோவியம் புனைந்து விடுகின்றனர். படைக்கப்பட்டு எவ்வளவு காலமாயினும் புததழகும் பொலிவும் குன்றாத வண்ண ஓவியங்களாக அவை விளங்குகின்றன. எத்தனை முறை ஓதினாலும் சலிக்காது நயம் அங்குக் கருவூலமெனத் திரண்டிருப்பக் காண்கின்றோம்.

### குறிப்புப் பொருள் அமைப்பு :

சொல்லும் பொருளும் திரியும் நெய்யும் ஆகின்றன; அவர்களது நாவகமே அகல் ஆகின்றது. அழகான விளக்கு ஏற்றப்

பட்டு விடுகின்றது. அதன் செஞ்சுடர் ஒளி கால வெள்ளத்தில் ஆடாமல் அசையாமல் நிற்கின்றது.

குறிப்பிற் குறிப்பாகப் பல்வேறு நலங்களை இனிய கவிதையிலே உள்ளடக்கி விடுகின்ற திறம் எல்லாக் கவிஞர்க்கும் வாய்ப்பதில்லை. குறிப்பு நுட்பம் அமைந்த கவிதைகளை நுண்ணிய அறிவு என்றும் மறப்பதற்கில்லை; அவை அறிவு நுட்பம் உடையார் எஞ்ஞான்றும் சுவைத்து மகிழ்தற்கேற்ற திட்பம் உடையனவாய்த் திகழ்கின்றன. நாடகக் குறிப்பு (Dramatic Irony) என்பது போலக் குறிப்பழகு அல்லது 'தொனிப்பொருள்' (Suggestion) என்ற ஒன்று கவிதையிலே சிறந்து விளங்கும்.

ஆங்கில இலக்கியத்தில் கூறப்படும் தொடர் உருவகம் அல்லது ஒட்டுவமையும் குறிப்புப் பொருள் சார்ந்ததே ஆகும். (Allegory: Description of a Subject under the guise of Some other Subject of aptly Suggestive resemblance.) உணர்வுடையோர்க்கே விளங்குமாறு அது கவிதையில் ஆழ்ந்து நிற்கும். பழங்காலத்தே அது பாட்டுக்கு உயிர் என்று மதிக்கப்பட்டது. பலகால் திரும்பத் திரும்ப ஓதுவதாலேயே அது மெல்ல மெல்ல வெளிப்படும்.

பொருளாழச் சிறப்பு :

விறகிலே தீ மறைந்துள்ளது; பாலிலே நெய் கலந்துள்ளது; மணியிலே ஒளி மறைந்துள்ளது; அவற்றைப்போல் மறைந்துள்ளான் இறைவன். உறவு என்னும் கோல் நட்டு உணர்வு என்ற கயிற்றால் முறுக வாங்கிக் கடைந்தால் அவன் வெளிப்பட்டருள்வான் என்பார் திருநாவுக்கரசு அடிகளார். இறைவனுடைய நிலைகள் ஒன்றாய், வேறாய், உடனாய் என மூன்றாக விளக்கப்பெறும். இதுதான் கவிதையிற் பொருளாழம் பற்றி எண்ணுங்கால் நினைவில் எழுகின்றது. ஆம்; பாட்டிலே ஆழ்ந்து ஈடுபட்டால் ஒழிய அதனுள் ஒன்றாகிச் சிறக்கும் பொருள் நுட்பத்தை வெளிக்கொணர முடியாது. ஆதலால் கவிதை அல்லது பாட்டினை மீண்டும் மீண்டும் பொருள் உணர்ந்து ஓதுதல் ஒன்றே அதன் அடிநிலை அறிய ஒரே வழி என்று கூறுவது மிகையாகாது.

திருவள்ளுவர், ''நவில்தொறும் நூல் நயம்'' போன்றது பண்புடையாளர் நட்பு என்று பாட்டிசைத்தார். அவர் கூறியதற்கு அவர் திருவாக்கே இனிய சான்றாக அமைவது என்று

கூறலாம். நட்பு உயர்ந்தவரிடத்தே தோன்றுமாயின் பழகப் பழக இனிது விளங்குவது நூலின் நயம் போன்றது என்ற நயம் மறக்க வியலாத மாண்புடையது. கவிதையை ஓர் உரை நடையைப் படிப்பது போல வெளிப்படையாகப் படித்து இன் புற்றுவிட முடியாது. அதனை உணர்ந்து இன்புறுவதற்கும் ஒரு பயிற்சி வேண்டும். அப் பயிற்சியும் அவ்வாறு ஓதி ஓதி அநுபவம் பெறுவதால் விளையுமே தவிர வேறொன்றாலும் விளையாது.

**உணர்விற்கு விருந்து :**

கவிஞனுடைய குறிப்புக்கள், பொருள் ஆழப்பகுதிகள் உணர்வுடை மாந்தர்க்கே விளங்கும்; அறிவுப்புலம் கொண்டு ஆய்வார் பெறும்பயனைவிட உணர்வாளர் பெறும் பயனே விழுமிதாக இருக்கும். கவிதை என்பதே முற்குறித்தவாறு உணர்வாளர் படைப்பே யன்றோ? "உணர்வினின் வல்லோர் அணிபெறச் செய்வன" என்றே பவணந்தியார் பகர்ந்தனர். உணர்வு உடையவர் குறிப்பு நலங்களை எளிதின் உணர்ந்து இன்புறுவர் : கோதாவரி யாற்றினை விளக்கப் புகுந்த கவியரசர் கம்பரும், "ஆன்ற பொருள் தந்த புலத்திற்றாகி" என்று குறிப்பின் உணரும் பொருளாழம் உடைமையைப் போற்றி யுள்ளமை நினைக்கத்தக்கதாகும்.

**பேருரைத் திறன் :**

**'உள்ளுறை உவமை'** என்றும், **'இறைச்சி'** என்றும் தொல் காப்பியர் உரைப்பன அனைத்தும் இச் சீரிய கவிப்பண்பினை விளக்குவனவாகும், சங்கத தொகை நூல்களில், பெரும்பா லான அகத்துறைப் பாடல்கள் உள்ளுறையோ இறைச்சியோ அமைந்தே காணப்படுகின்றன. புறத்துறைப் பாடல்களில் இவ்வமைப்புக் குறைந்தே காணப்படுகின்றது. பிற்கால பக்தி நெறிப் பாடல்களில் திருவாய்மொழிக்கமைந்த வியாக்கி யானங்கள் ஆழ்ந்து ஆழ்ந்து சிந்தித்து அழகிய விளக்கங்களைத் தருவதில் தன்னிகரற்று விளங்குகின்றன. திருமுறை இலக் கியங்களுக்கு அத்தகைய பேருரைகள் எழாமையால், குறிப்புப் பொருள் அமைந்த மொழிகளை இனிது விளங்கிக் கொள்ளும் வாய்ப்பு அருகித் தோன்றலாயிற்று என்று கொள்ளலாம்.

**சங்கப் பாட்டுள் ஒன்று :**

குறுந்தொகையில் ஒரு பாட்டு. வரைவு இடைவைத்துத் தலைவன் பொருள்வயிற் பிரிந்த காலத்தில் ஆற்றாளாகிய

தலைமகனை நோக்கி 'நீ ஆற்றுதல் வேண்டும்' என்ற தோழியைப் பார்த்து 'நான் தலைமகன் கருத்தினை உணர்ந்து கொண்டேன்; ஆயினும் நொதுமலர் வரையப் புகுவரேல் என் செய்வதென ஆற்றேனாயினேன்' என்கின்றாள். கபிலர் பாடுகின்றார் :

"ஒன்றே னல்லேன் ஒன்றுவென் குன்றத்துப்
பொருகளிறு மிதித்த நெரிதாள் வேங்கை
குறவர் மகளிர் கூந்தற் பெய்ம்மார்
நின்று கொய மலரும் நாடனொடு
ஒன்றேன் தோழி ஒன்றி னானே"

என்பது பாடல் வடிவம். 'பொருகளிற்றால் மிதிக்கப்பட்ட வேங்கைமரம் சிதைந் தொழியாது பின்னும் பறித்தற்கு எளிய தாகித் தாழ்ந்து மலரும்' என்றது, 'நொதுமலர்' வரைவினால் அச்சமுற்றேனாக, அதுவே காரணமாக விரைவில் மணந்து கொண்டு பின்னும் எளிதில் இன்பம் துய்த்தற்கு உரியான்' என்ற குறிப்பை உணர்த்துவதற்காக என்பர் அறிஞர். 'பொரு களிறு என்றமையால் தலைமகளது தமர் தலைமகன் வரைவிற்கு உடன்படுவாரும் மறுப்பாருமாக மாறுபட்டனர் என்ற குறிப்பு விளங்குகின்றது'' என்று இளம்பூரணர் கூறுவர். (தொல். பொருள். 31, இளம். உரை) 'மிதியுண்டு வீழ்ந்த வேங்கை குறை உயிரோடு மலர்ந்தாற் போல யானும் உளேனாயினேன்' என்று பேராசிரியர் பின்னும் ஒரு விளக்கம் கூறினர். (தொல். உவம. 25. பேரா. உரை) 'பிறிதொன்றன் பொருட்டுப் பொருகின்ற யானையால் மிதிப்புண்ட வேங்கை நசையற உணங் காது மலர் கொய்வார்க்கு எளிதாகி நின்று பூக்கும் நாடன் என்ற தனானே தலைவன் நுகருங்காரணத்தானன்றி வந்து எதிர்ப் பட்டுப் புணர்ந்து போயினான் எனவும், அதனான் நாமும் உயிர் தாங்கியிருந்து பலராலும் அலைப்புண்கின்றனம்; எனவும் பொருள் குறிக்கப்பட்டதாக நச்சினார்க்கினியர் கருதுவர். (தொல். அகத். 47. நச்சி. உரை)

இவ்வாறு இவ்வொரே பாடற்கண் நுட்பமாகச் சிந்திக்குங் கால் பல்வேறு பொருட் குறிப்புச் செய்திகள் நின்று கவியழகு விளைத்து நிற்றல் காணலாம். இவ்வாறே அகநானூற்றுப் பாடற்பகுதிகளில் பல இடங்களில் ஆழ்பொருட்பகுதிகள் தென் படுகின்றன.

**திருமுறையுள் ஒரு கவிதை :**

திருமுறைகள் என்று சிறப்பிக்கப்பெறும் சிவநெறிப் பாட்டுக்களுக்குத் திருவாய்மொழிப் பேருரைகள் போன்ற

அமைப்புடையவை இல்லாததால், அவற்றுட் காணப்பெறும் குறிப்பழகுகள் பலராலும் அறியப்படாமற் போயின.

அவற்றுள்ளும் விழுமிய கவிதைகள் பல காணப் பெறுகின்றன; அவற்றுட் குறிப்பழகு அமைப்பும் உள்ளது. காட்டாக ஒன்றினைக் குறிப்பது இங்குப் பெரிதும் பொருத்தமாகும். திருநாவுக்கரசர் திருப்புத்தூர்த் திருப்பதிகத்து ஓர் அழகிய திருத்தாண்டகம் புனைந்துள்ளார். அப் பாட்டின் வடிவம் பின் வருவது :

"மின்காட்டும் கொடிமருங்குல் உமையாட் கென்றும்
விருப்பவன்காண் பொருப்புவலிச் சிலைக்கையான் காண்
நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி
நற்கனகக் கிழிதருமிக் கருளினோன் காண்
பொன்காட்ட கடிக்கொன்றை மருங்கே நின்ற
புனக்காந்தள் கைகாட்டக் கண்டு வண்டு
தென்காட்டும் செழும்புறவிற் திருப்புத் தூரில்
திருத்தளியான்காண் அவன்என் சிந்தை யானே"

தருமி என்ற ஏழை அந்தணச் சிறுவனுக்கு மனமிரங்கி இறையனார் பாடித் தந்த "கொங்குதேர்" எனத் தொடங்கும் பாடலுக்குப் பொற்கிழி கிடைத்த வரலாற்றை இரண்டாம் வரியிற் குறிக்கின்றார் அடிகளார். அது குற்றம் தீர்ந்த பாட்டு என்பார் 'நன்பாட்டு' என்ற அடைமொழி யடுத்து அருளினார். தான் பாடல் மொழிந்து தருமி பொற்கிழி பெறுமாறு அருளினன் இறைவன் என்ற அடிகளார் மூன்றும் வரியில் இயற்கையை விளக்குவார்போன்று குறிப்பிட்ட வரலாற்றை உள்ளுறுத்து ஓதுகின்றார். 'கொன்றை மலர்கள் பொற்காசுகளைப் போன்றன; காந்தட் பூக்கள் கைகள் போன்று மலர்ந்துள்ளன; வண்டு பண் மிழற்றுகின்றது' என்ற அச் செய்தி,—வண்டு பண்ணிசைக்கக் காந்தட் கரங்கள் கொன்றைப் பொன்னிற மலர்கள் பெற்றன என்ற விளக்கம்—இறையனார் பாட்டிசைக்கப் பொற்கிழி பெற்றவன் தருமி என்றதனை விளக்கும் குறிப்பழகு உடையதாதல் உணர்ந்தின்புறத்தக்கது.

கவிதையில் காணும் பொருட் குறிப்பு மொழிகள், சுருங்கக் கூறினால், படிப்போர் உணர்விற்குப் பேரின்பம் தருவன என்று விளக்கிக் காட்டத் தமிழில் எண்ணற்ற சான்றுகள் காணலாம்.

# வடமொழிவேதமும் தமிழ்மறையும்

**[என். கே. வேலன் பி.ஏ.]**

கி. வா. ஜகந்நாதன் அவர்கள் 8—8—73 அன்று மாலை கபாலீச்சரத்தின் திருமுறை விழாவில் முதல் மூன்று திருமுறைகளைப் பற்றிப் பேசினார்.

திருஞானசம்பந்தப் பெருமான் 'தோடுடைய செவியன்' என்ற பாடலில ரிக்வேதத்தின் ஓங்காரத்தை முதற் சொல்லில் அமைத்திருப்பதாகவும், 'கள்வன்' என்ற சொல்லை யஜுர் வேதத்திலிருந்து எடுத்திருப்பதாகவும், 'பெம்மான் இவனன்றே' என முடிக்கும்போது 'ஏ' காரத்தைச் சாம வேதத்திலிருந்து எடுத்திருப்பதாகவும் கூறினார். வடமொழி வேதம் எழுதாக்கிளவி எனவும் தமிழ்வேதம் எழுதும் கிளவி எனவும் பேசினார்.

மூன்று வயதுக் குழந்தை ஞானப்பால் உண்டு இறைவன் அருள்பெற்றுப் பாடுகின்றது. இப் பாடல் வடமொழிவேதத்திலிருந்து வந்ததெனக் கூறினால் அஃது எங்ஙனம் பொருந்தும்? வடமொழி உலக வழக்கற்றுப் போனதும் தமிழ்மொழி என்றும் இளமையோடிருப்பதும் ஐயர் அவர்களுக்குத் தெரியாதா? இறந்துபோன மொழிக்கு உயிர் கொடுப்பதற்காக ஒரு மொழியை உயர்த்தியும் ஒரு மொழியைத் தாழ்த்தியும் பேசலாமா?

ஓங்காரம் வடமொழியிலிருந்து தமிழ் மொழிக்கு வந்ததென முன்னொரு முறை ஆத்திக சமாஜத்தில் பேசினார். அதற்குச் செந்தமிழ்ச் செல்வி சிலம்பு 47 பரல 8ல் மறுப்பு எழுதப்பட்டது. தமிழ் எழுத்துக்கள் தெய்வத் தன்மையுடையவை எனவும் தமிழ் மொழியின் அமைப்பு மறைத்தன்மை யுடையதெனவும் ஆராய்ச்சியாளர்கள் விளக்கிக் காட்டியுள்ளனர். தமிழ்மொழி மிகச் சிறந்த முறையில் அமைக்கப்பட்டிருக்கின்றது என்பதை எவராலும் மறுக்க முடியாது. தமிழின் பெருமையை நன்குணர்ந்த ஐயர் அவர்கள் தமிழ்மறை வடமொழியிலிருந்து வந்ததெனக் கூறுவது மிகவும் வருந்தத்தக்கது.

> *"தொண்டர் நாசனைத் தூதிடை விடுத்ததும் முதலை*
> *உண்ட பாலனை அழைத்ததும் எலும்புபெண் ணுருவாக்*
> *கண்ட தும்மறைக் கதவினைத் திறந்ததும் கன்னித்*
> *தண்ட மிழ்ச்சொலோ மறுபுலச் சொற்களோ சாற்றீர்"*

எனவும்

> ***"கண்ணு தற்பெருங் கடவுளும் கழகமோ டமர்ந்து***
> ***பண்ணு றத்தெரிந் தாய்ந்தஇப் பசுந்தமிழ் ஏனை***
> ***மண்ணி டைச்சில இலக்கண வரம்பிலா மொழிபோல்***
> ***எண்ணி டைப்படக் கிடந்ததா எண்ணவும் படுமோ"***

எனவும் படித்த பாடங்களை ஐயர் மறந்து விட்டாரெனத் தோன்றுகின்றது.

தமிழுக்குத் தொண்டு செய்ய வருபவர்கள் வேறு மொழிக்கு விளம்பரம் செய்யலாமா? இதற்கு இடம் கொடுக்கக் கூடாது.

> "எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
> எனறென்றும் வாழியவே"

என வாழ்த்துவோம்.

> "கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையாளமும் துளுவும்
> உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்
> ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன்
> சீரிளமைத் திறம்வியந்து செயன்மறந்து வாழ்த்துதுமே"

எனப் போற்றுவோம். உலகமெலாம் தமிழ் முழக்கம் செய்வோம்.

பேராசிரியர் கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் செந்தமிழ்ச் செல்வி முதற் சிலம்பின்கண் 'திருநான்மறை விளக்கம்' என்ற தலைப்பில எழுதிய கட்டுரைகளின் வழி ஆரியவேதம் வேறு தமிழ் நான்மறை வேறு என்பதைத் தெள்ளத் தெளிய விளக்கி யுள்ளார்கள்.

> 'அழிந்த சிந்தை யந்தணளர்க் கறம்பொரு ளின்பம்வீடு
> மொழிந்த வாயான் முக்கணாதி மேயது முதுகுன்றே"

> "ஓரா னீழ லொண்கழ லிரண்டும்
> முப்பொழு தேத்திய நால்வர்க் கொளிநெறி
> காட்டினை'

என்று திருஞானசம்பந்தரும்,

> "ஆல் நீழலன் றிருந்தறநெறி
> நால்வர்கேட்டு நன்கினிதருளினை"

என்று நக்கீரநும் அருளியவாற்றானும்,

> "ஆலமர் நீழலந் நால்வர்க் கன்றுரைத்த
> ஆலமர் கண்டத் தான்"

என்று நாலாயிரப் பிரபந்தம் இயற்பா திருவந்தாதியிற் காணுமாற் றானும் தமிழ் நான்மறையே எழுதாக் கிளவி என்பதை வலி யுறுத்தும். இங்ஙனமிருக்கவும் சைவ சமய மரபுக்கும் தமிழ் மரபுக்கும் மாறுகப் பேசுபவரைத் திருக்கோயில்களும் திருமடங் களும் ஏன் அழைக்கவேண்டும் என்பது சைவ நன்மக்கள் கவனத்திற்குரியது.

# ஆண்மகப் பேற்றினை உயர்வென்றல்

## [வண்ணச்சரபம் தண்டபாணி அடிகள்]

உலகில் மக்கட் செல்வம் உயர்வென்பதில் ஆண்பெண் என்ற இரண்டும் பொதுவாக ஒன்றேயாயினும், ஆண்மகவை உயர்வெனக் கொள்வது சிறப்பாயிற்று. உலகியலில் ஆண் வீர முடையதாயும், பெண் மென்மையுடையதாயும், ஆண் நுகர்ப வனாயும், பெண் நுகர்ச்சிக்குரியதாயும் உள்ளதறியலாம். தனித்த ஓர் ஆணோ, அல்லது பெண்ணோ இருந்து வாழ முடியாது உலக வளர்ச்சியும் இராது. அசரம் என்ற நிலை யியல் உயிரிடத்தும் இவ் வேறுபாடிருக்கிறது. மின் இயக்கமும் இரு சத்தி சேர்ந்தே செயல்படுகிறது காண்கின்றோம் - ஏன் சிவமும், திருவருட்சத்தியும் சேர்ந்தே ஐந்தொழில் நடைபெறு கிறதென்பர். சத்தியுடன் இணைந்தே கடவுள் வடிவங்களும் அமைந்திருப்பதறிகிறோம். இக் கருத்தை வண்ணச் சரபம் தண்டபாணி யடிகளின் வாழ்க்கைத் துணைவியராயிருந்த சுந்தரத்தம்மையவர்கள் பாடிய ஒரு நூலில்,

> "ஆணன்றிப் பெண் மகிழா(து) அந்தவண்ணம் பெண்ணின்றி
> மாணென்றி ஆணும் மகிழாதே"

என்பர் (பெண்மாட்சி) இருப்பினும் ஆணிடமே பல சிறப்பும் காண்பது மக்களியல்பு.

ஷை தண்டபாணி சுவாமிகள், திருவாமாத்தூர்த் தல புராணம் பாடினர். அதில் மதங்க முனிவர் பூசித்த வரலா றுள்ளது. அக்கால், அரசன் ஒருவன் பெண்மகவொன்று பெற்றான், சபரன் என்ற பெயரினன். எனவே சபரி எனப் பெயரிட்டு வளர்த்தான். ஆண்மகவு வேண்டிய அவன், மதங்க முனிவர் இருக்கும் இடம நாடி வந்தான் குறையிரந் தான் - தன் சிறு பெண்ணை அவர்கட்குப் பணி செய்யவிட்டு ஆண்மகவுக்கு அருள்பெற்றுச் சென்றான். இதில் சாதாரண மக்களே ஆண்மகப் பேற்றை விரும்புவது மரபு - அரசனுவான் விரும்புவதில் வியப்பில்லை என்கின்றார்.

> "ஆண்மதலை யேஉயர்வெ னக்கொளும் ஓர் ஆசை
> *வீண்மகர் தமக்கும் உறல் மேதினி வழக்கு"

---

* வீண்மகர் - இழிந்த தொழில் செய்து வாழும் ஏழைக் குடி மக்களும் கூட என்க.

என்பதாம். மதுரையில், மலையத்துவச பாண்டியன் விரும்பினான்* மேலும் பலர் வரலாறுகள் உள்ளன. திருநெல்வேலியில் வாழ்ந்த செந்திநாயகம் பிள்ளையென்பார் மகப்பேறு வேண்டி மூன்று மணம் செய்தார். மூன்றுமவட்குப் பெண் பிறந்தது. மகிழ வில்லை. தமக்குக் கருமம் செய்யப் பெண் இருந்தென்னபயன்? ஆண்சேய் வேண்டித் தெய்வ ஆணைப்படி நான்காவது மணம் செய்தனர். அவர் விருப்பப்படியே - தண்டபாணியடி களும், சித்திரபுத்திரர் என்பவரும் பிறந்தனர் என்பதறி கிறோம்.

திருவாமாத்தூரை யடுத்துள்ளது மதுரைப்பாக்கம் என்ற பதி. அவ் வூரில் செல்வப் பொலிவுடன் வாழ்ந்தவர் சாம்பசிவ ரெட்டியார். அவர் மகன் துரைசாமி ரெட்டியார். இவர் மனைவியார் பவுனம்பாள். இவர்கட்கு மகப்பேறில்லை. பல அறமியற்றினர். அது சமயம் தண்டபாணி சுவாமிகளைத் தம் இல்லில் அழைத்து வந்து வழிபட்டார்கள்.

இவர்கள் குறிப்புணர்ந்த சுவாமிகள், தமது வேலாயுத வழிபாட்டில் - திருநீறுதவி, ஒரு பாட்டும் கூறி ஆசி வழங்கினர். அந்தப் பாட்டில் அவ் வூரில், சிவன் கோவிலில்லை. கிராம தேவதைக் கோவிலே யிருந்தது. மக்கள் குடிநீர் வசதியுமில்லை. இதைத் திருவுளங் கொண்டனர். குளமொன்றும், கோவி லொன்றும் செய். அப்போது பெண்மகவு ஒன்றும் ஆண்மக வொன்றும் பெறுவாய். இஃது என் கற்பனையன்று. கலைமகள் வாக்காகும் என்றார். கவி காண்க :

*"சாம்பசிவ ரெட்டியன்பிற் றந்ததுரைசாமிரெட்டி*
*ஆம்பல்மலர் வாவியொன்றும் ஆலயமொன்றும் செய்தால்*
*காம்பவிர்தோட் கன்னியொன்றும் காளையொன்றும் பெற்றிடுவான்*
*நாம்பகர்ந்ததல்லஇது, நாமடந்தை சொன்னதுவே."*

என்பதாம்.

முதலாவதாகக் குளமொன்று செய்தார். பெண் பிறந்தது. மகவேயில்லாதவருக்குப் பெண் பிறந்தது மகிழ்வுதான். ஆணு யில்லையே என்பது குறை. உடனே சுவாமிகளைக் காணவேண்டிப் பழம் முதலியவற்றுடன் வந்து வணங்கினர். குறிப்பை யறிந்த சுவாமிகள் - அப்போது ஒரு வெண்பா ஓதினர். நாம் சொன்னது வீணாகாது. பலருக்கு முருகன் விரும்பியபடி அருள் புரிந்திருக்கின்றான். ஆண்மகவும் பெறுவாயென்பது பாடற்பொருள்.

"எண்சந் ததிபலருக் கீந்தகுக ரேசன்உனக்கு
ஆண்சந் ததியும் அருள்செய்வான் - மாண்சிந்தை
ஏக்கமுறேல்"

என்று கூறியனுப்பினர். ஆனல், ஆலயம் செய்யவில்லை. ஏனோ தாமதித்தார். ஆண்மகவு தோன்றவில்லை. அவர் வாழ்நாளும் முடிந்தது. அடிகள் வாக்குப் பொய்க்கவில்லை. அவர் பெற்ற பெண்ணுக்கு இரண்டு ஆண் சந்ததிகள் தோன்றின என்பது கண்கூடு. அந்தக் குடும்பத்தினர் வாழ்கின்றனர்.

"ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானம்" என்பது இக் கால வழக்காயினும், வாழ்வியலிற் கொள்ளலாமேயன்றி, தனித்து ஒரு பெண் வாழக்கூடாது. முடியாததுமாம். பெண் உள்ளம் மென்மையானது.

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின்"

என்றே கூறினர் வள்ளுவர். இதனல் திண்மை உண்டாவது அரிது. ஒருசிலர்க்கே அஃது அமையுமென்பதைக் குறித்திருப்பதையறிகிரும். ஆண் பெண் என்று முதலில் ஆணையே கூறுகிரும். 'அப்பன் நீ' என்ற இடத்து ஆண்மை முன் நிற்கின்றது. "அவன் அவள் அது" என்ற இடத்தில் அவன் என்ற ஆண்பாலே முதலிடம் பெறுகிறது. இதுபோற் பலவாம்.

---

## திருவள்ளுவர் கலைக்கோயில் (நினைவாலயம்)

*திருவள்ளுவரைப் பற்றிய நினைவை மக்கள் உள்ளத்தில் நிலைபெறச் செய்யும் முயற்சியில் மற்றெந்த அரசையும் விட இப்போதைய தமிழக அரசு அதிக அக்கறை காட்டி வருகின்றது. சென்னை மயிலையில் உள்ள திருவள்ளுவர் கோயிலைப் புதிப்பிக்கும் திட்டமொன்றை இவ்வரசு முன்னரே வெளியிட்டுள்ளது. அது போன்றதொரு புதிய திட்டத்தைச் செயல்படுத்த முன்வந்துள்ள இவ்வரசு சென்னை நுங்கம்பாக்கம் ஏரிக்கரைப் பகுதியில் 80 மனைகள் அளவில் திருவள்ளுவர் கலைக் கோயில் ஒன்றை ரூபாய் 10 இலக்கம் செலவில் அமைப்பதென முடிவு செய்துள்ளது. இம் முடிவு இவ்வாண்டு அரசின் வரவு—செலவு திட்டத்தில் இடம் பெற்றுள்ளது. திருக்குறள் நெறியினை இங்ஙனம் நாடறியச் செய்யும் தமிழக அரசின் முயற்சிகள் அனைத்தும் பாராட்டுதற் குரியவை.*

# திருச்சியில் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் கிளை திறப்பு

1974 மார்ச்சுத் திங்கள் 4 ஆம் நாள் திங்கட்கிழமை மாலை 6-30 மணிக்கு அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தின் முன்னுள் துணைவேந்தர் திவான் பகதூர் திரு. தி. மு. நாராயணசாமி பிள்ளை அவர்கள் தலைமையில் திறப்பு விழா நடைபெற்றது. முத்தமிழ் வள்ளல் திரு இலஞ்சி அ. இ. முத்துக் குமாரசாமி இறை வணக்கம் பாடினுர்கள். பின்னர்க் கழகப் பொது மேலாளர் திரு. இரா, கல்யாண சுந்தரம் வந்திருந்தோர் அனைவரையும் வரவேற்றுப் பேசிய பின்பு திரு. பிள்ளையவர்கள் தெப்பக்குளம் கீழ்ப்பக்க முள்ள 24, நந்திகோயில் தெரு யுனைற்றெட் இந்தியா விடுதியின் வடபக்க முள்ள அறையில் கிளை அலுவலகத்தைத் திறந்து வைத்துப் பேசினுர்கள்.

''தமிழகத்தின் மையமாகத் திகழும் திருச்சி மாநகரில் இவ் வலுவலகம் பல ஆண்டுகளுக்கு முன்பே திறக்கப் பெற்றிருக்க வேண்டும், இன்று அந்தக் குறை நீங்கிற்று. கழக ஆட்சி யாளர் உயர்திரு. வ சுப்பையா பிள்ளை அவர்களை நான் நன்கு அறிவேன்'' என்றும், தாம் பாடநூற் குழுவின் தலைவராக இருந்தபோது அடிக்கடி அவர்களுடன் கலந்து உரையாடுகிற பேறு கிடைத்தது என்றும் குறிப்பிட்டார்கள். சிறப்பாகச் சங்க இலக்கியங்களையும், சமய இலக்கியங்களையும் கடந்த 53 ஆண்டு களாக மிகச் சிறந்த முறையில்-கண்ணையும் கருத்தையும கவர் கின்ற முறையில் வெளியிட்ட பெருமை திரு. பிள்ளையவர்களைச் சாரும். இந்த ஒரு வகையில் ஏனைய வெளியீட்டாளர்களைவிட மிகச் சிறந்த நிலையில் முன்னணியில் நிற்கிருர்கள் என்றும் பாராட்டினுர்கள். தம்முடன் டாக்டர் ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்கள் உரையாடும் பொழுதெல்லாம் கழக ஆட்சி யாளர் அவர்களை வெகுவாகப் பாராட்டிப் பேசுவார்கள் என்றுங் கூறினுர்கள்.

அடுத்து, திருவாசக மணி கே. எம். பாலசுப்பிரமணியம் அவர்கள், வ. சு. பிள்ளையவர்களுடைய தனி மாட்சியைப் பற்றிக் கூறியதுடன் மிகச் சிறந்த முறையில் கண்கவர் பதிப்புக் களை மேனுட்டுப் பதிப்புக்கள்போல் வண்ணம், வண்ணமாக வெளியிட்டுள்ளார்கள் என்றும் குறிப்பிட்டார்கள். இலண்டன் மாநகர் பக்கிங்காம் அரண்மனையில் 'திருக்குறளை' உயர்ந்த பீடத்தில் இருக்கச் செய்த பெருமை திரு. வ. சு. அவர்களையே சாருமென்றுர்கள்.

அடுத்து நாவலர் சி. அரசப்பனுர் 'திருக்குறள் தெளி வுரையைச்' சில ஆண்டுகளில் பல ஆயிரம் படிகளை வெளியிட்ட பெருமை கழகத்திற்கே உரியது என்றுர்கள். தமிழ்ச் சங்கத் துணைச்செயலர் திரு. பொ. மாணிக்க வாசகம் பிள்ளை அவர்கள்

கழகத்தின் தொண்டைப் பாராட்டினார்கள். பேராசிரியர் ரம் போலா மாஸ்கரனேஸ் அவர்கள் "உயர்ந்த தரமுள்ள நூல்களை மிகச் சிறந்த முறையில் வெளியிட்ட பெருமை கழகத்தைச் சாரும்" என்றார். டாக்டர் வின்சுலோ பெருமகனார் திருவுருவப் படம் கிடைப்பதற்கு மேனாட்டுடன் தொடர்புகொண்டு தமது கழகப் படத் தொகுப்பில் சேர்த்து வைத்த பெருமையைப் பாராட்டினார்கள்.

பேராசிரியர் நயினார் முகம்மது அவர்கள் 'கழகம்' என்ற சொல்லையும், 'சைவ சித்தாந்தம்' என்ற சொல்லையும் கழக அமைப்பு முறையையும் பாராட்டினார்கள். சமய இலக்கிய நூல்களை வெளியிட்ட பெருமை திரு. பிள்ளையவர்களையே சாரும் என்றார். முத்தமிழ் வள்ளல் இலஞ்சி திரு. அ. இ. முத்துக் குமாரசாமி அவர்கள் "அகத்தியர் உருவத்தில் சிறியவர். ஆனால் ஆற்றலில் பெரியவர். அவரைப்போல அளவினிற் குறியராகி ஆற்றலில் நெடியராகித் திகழ்கின்றார் திரு. வ. சு. பிள்ளை" என்றார். மூர்த்தி சிறிதானாலும் கீர்த்தி பெரிது அன்றோ! திரு. பிள்ளையவர்கள் செயல் திறன் மிக்கவர்கள். எதையும் திட்டமிட்டுச் செயலாற்றும் வன்மை மிக்கவர்கள். பலபெரும் தமிழ்ப் புலவர்களைத் தமிழகத்திற்கு அறிமுகப் படுத்திய பெருமை அவர்களையே சாரும். சமயகுரவர், சந்தான குரவர், திருவள்ளுவர், மேனாட்டு, தமிழ்நாட்டுப் பெரும் புலவர்கள் ஆகியோரின் திருவுருவப் படங்கள் முதலியவற்றை இளம் தலைமுறையினர் கண்டு மகிழும் வண்ணம் தொகுத்துப் போற்றிப் பாதுகாத்து, தமிழ் விழாக்களிலும், சைவமாநாட்டு நிகழ்ச்சிகளிலும், இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டு அரங்கிலும் காட்சி அமைத்துக் காட்டிய பெருமை அன்னாரையே சாரும்.

திருச்சியிலும், சுற்றுப்புறங்களிலும், பள்ளிகளில் பணியாற்றுகின்ற ஆசிரியப் பெருமக்கள் குறிப்பிட்ட முறையில் புலவர் தேர்வு எழுத வேட்கையுடன் இருக்கின்றனர். அவர்கட்கு உறுதுணையாக மாலை நேரங்களில் பயிற்றுவிப்பதற்குரிய தமிழ்க் கல்லூரி இங்கே இல்லை. நெல்லையில் கழகத்தின் சார்பில் நடைபெற்று வரும் திருவள்ளுவர் செந்தமிழ்ப் புலவர் கல்லூரியைப் போன்று இங்கும் ஒரு கல்லூரியினை நிறுவ வேண்டும் என்று கழக ஆட்சியாளரவர்களையும், கழகச் செயற்குழு உறுப்பினர்களையும் வேண்டினார்கள்.

இறுதியில் கழகத்தின் சார்பில் நன்றி நவிலலுடன் கூட்டம் இனிது நிறைவேறியது.

# டாக்டர் ஔவை. நடராசன் அவர்கட்குப் பாராட்டு



கழகத்தின் சிறப்புமிக்க உரையாசிரியர்களுள் ஒருவரும் உரை வேந்தருமான ஔவை சு துரைசாமி பிள்ளை அவர்களின் திருமகனார் தம் தந்தையாரைப் போல் சமய இலக்கியத்திலும், சங்க இலக்கியத்திலும் திருந்திய புலமை பெற்றுள்ளமைக்கு எடுத்துக்காட்டாக முதற்கண் 'திருக்கோவையார்' பற்றி ஆய்வுரை எழுதி எம் லிட் பட்டமும் அண்மையில் 'சங்க காலப் பெண்பாற் புலவர்கள்' என்னும் பொருள்பற்றி ஆய்வு நூலெழுதிச் சென்னைப் பல்கலைக் கழகத்திலே 'டாக்டர்' பட்டமும் பெற்றுள்ள செய்தியறிந்து பெருமகிழ்ச்சி அடைகின்றோம். டாக்டர் திரு ஔவை நடராசன் அவர்கள் கலைத்துறையில் மேன்மேலும் பேரும் புகழும் பெற்றுப் பெருவாழ்வு வாழத் திருவருள் புரிகவென உளமார வாழ்த்துகின்றோம்.

---

## 'நல்லாசிரியர்' விருது பெற்ற நற்றமிழ்ப் புலவர் தணிகை உலகநாதன் அவர்கள்

நம் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகப் பேரன்பரும், மாணவர் மன்றச் செயலாளருமான கவிஞர் — புலவர் தணிகை உலகநாதன் ஜே பி அவர்கட்குத் தமிழ்நாட்டு அரசு இந்த ஆண்டில் 'நல்லாசிரியர் விருது' வழங்கிச் சிறப்பித்துள்ள மகிழ்ச்சிதரும் செய்தியைத் தமிழாசிரிய நண்பர்கட்கும் பிற தமிழன்பர்கட்கும் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றோம்.



திரு. தணிகை உலகநாதன் அவர்கள் இந்து தியலாஜிகல் உயர்நிலைப் பள்ளியில் முப்பது ஆண்டுகள் நல்லாசிரியராகப் பணியாற்றி வருகின்றார். வானொலிச் சிறுவர் சங்கங்களின் பேரவைத் தலைவராகப் பணியாற்றி வருகின்றார். மாணவர்கட்காகப் பல நூல்களும் உரை நூல்களும் எழுதியுள்ளார்.

மாணவர்களை நல்ல குடிமக்களாக உருவாக்கும் பணியில் முப்பது ஆண்டுகள் ஈடுபட்டுள்ள இவர் அரசின் நல்லாசிரியர் விருதினைப் பெற்றிருப்பது சாலப் பொருத்தமுடையதாகும். மாணவர் மன்றத்தின் வாயிலாக இவர் மாணவர் உலகிற்கு ஆற்றிய அரும்பணிகள் அளப்பில. இத்தகைய நல்லாசிரியர்க்குச் சென்ற ஆண்டு சிறப்பு நடுவர் (Honorary Magistrate) பதவி வழங்கப்பட்டதும் இவ்வாண்டு நல்லாசிரியர் விருது வழங்கப்பட்டிருப்பதும் இவர்தம் சிறப்புகளுக்குச் சிறந்த எடுத்துக் காட்டுகளாகும். விருது பெற்ற கவிஞர் தணிகை உலகநாதன் அவர்கட்குக் கழகத்தின் சார்பில் எமது உளமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

# செய்திகளும் குறிப்புகளும்

## திரு. சிட்டிபாபு அவர்கள் கல்லூரிக்கல்வி இயக்குநராக உயர்வு பெற்றார்.

பல ஆண்டுகளாகப் பள்ளிக்கல்வி இயக்குநராக இருந்து பல அரிய பணிகளாற்றிய திரு. எஸ். வி. சிட்டிபாபு அவர்கள் கல்லூரிக்கல்வி இயக்குநராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார். அதே நேரத்தில் பள்ளிக் கல்விக் கூட்டு இயக்குநராக இருந்த திரு. ஆர். பெருமாள் அவர்கள் பள்ளிக்கல்வி இயக்குநராக உயர்த்தப் பட்டுள்ளார். இவ்விரு செய்திகளும் நமக்குப் பெருமகிழ்வூட்டுவன. ஏனெனில் இவர் தம் ஆற்றல்களை நன்கறிந்து, "இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து, அதனை அவன்கண் விடல்" என்னும் பொய்யா மொழிக்கு ஏற்ப அரசு இவர்கட்கு உயர்வளித்துச் சிறப்பித்துள்ளது. திரு சிட்டிபாபு அவர்கட்கும், திரு. பெருமாள் அவர்கட்கும் எம் உளமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

## சிவஞானபோத விரிவுரை

தமிழ்நாடு தெய்விகப் பேரவையின் சார்பில் சென்னை ஆழ்வார் பேட்டை, 9, மகாராஜா சூரியாராவ் சாலையில் உள்ள பேரவைச் செயலகத்தில் 8—3—74 முதல் 22—3—74 வரை நாடோறும் மாலை 6-15 மணி முதல் 7 30 மணி வரை, காஞ்சிபுரம் தொண்டை மண்டல ஆதீனம் சிவத்திரு ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் 'சிவஞானபோத விரிவுரை நிகழ்த்துகின்றார்'கள். முதல் நாளில் சிலத்திரு குன்றக்குடி அடிகளார் தலைமையில், அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்மன், பி ஏ., பி. எல். அவர்கள் நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்தார்கள், எனப் பேரவைச் செயலாளர் திரு. அ. நாராயணசாமி, பி ஏ., அவர்கள் அறிவிக்கின்றார். அன்பர்கள் இச் சிவஞான போத விரிவுரையினைக் கேட்டுச் சிவனருள் பெறுவார்களாக.

## திருவள்ளுவர் தமிழ்க்கல்லூரி

சென்னை நக்கீரர் கழகச் சார்பில் நடைபெற்று வரும் திருவள்ளுவர் தமிழ்க்கல்லூரியில் பேராசிரியர் கா. நமச்சிவாயர் நினைவுச் சொற்பொழிவுகள் ஆண்டுதோறும் நடைபெற்று வருவதுபோல் இவ்வாண்டும் 11—3-74 முதல் 19—3—74 வரை நடைபெறும் விழாவினை மாலைக் கல்லூரி முதல்வர் பேராசிரியர் ஜே ராமச்சந்திரன் அவர்கள் தொடங்கி வைத்துக் கல்லூரி ஆசிரியர்களைப் பாராட்டிப் பரிசுகளை வழங்குவர். திரு கா ஏ. அருணாசலம், எம். ஏ., பி. காம் அவர்கள் தலைமை உரை ஆற்றுவார்.

சங்க காலம், தொல்காப்பியம்—பொருள், நன்னூல், சிலப்பதிகாரம், யாப்பு-தண்டி, இலக்கியத்திறன், அகப்பொருள், மொழியியல், இலக்கியமும் கலையும் என்னும் பொருள்கள் பற்றிப் பேராசிரியர்கள் ஒன்பதின்மர் சொற்பொழிவாற்றுவர்.

## அண்ணாமலை நகரில் சிலப்பதிகாரக் கருத்தரங்கு

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையின் சார்பில் எட்டாவது கருத்தரங்கு பிப்ரவரி 16, 17ஆம் நாள்களில் அண்ணாமலை நகரில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. சிலப்பதிகாரத்தின் கதைக் கரு, திணைச் செய்தி, மன்னர்கள், புராணக் கூறுகள், கிளைக் கதைகள் முதலாய பல கூறுகள்மூலம் இக் கருத்தரங்கில் சிலப்பதிகாரத்தின்

சிறப்பியல்கள் ஆராயப்பெற்றன. தமிழ்த்துறை ஆசிரியர்கள் பதின்மூவர் ஆய்வுக் கட்டுரைகளைப் படித்தனர் பல்கலைக் கழகப் பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும் மாணவ மாணவியரும் பெருந் திரளாக வந்திருந்து இக் கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

இந்திய மொழிப்புல முதன்மையர் தமிழ்த்துறைப் பேராசிரியர் டாக்டர் வ. சுப மாணிக்கம் அவர்கள் வரவேற்புரை யாற்றினார். டாக்டர் பி கோவிந்தன் கருத்தரங்கைத் தொடங்கி வைத்தார்.

16-2-74 பிற்பகல் நிகழ்ச்சிக்கு டாக்டர் மு. கோவிந்தசாமி தலைமை தாங்கினார் 17-2-74 முற்பகல் கருத்தரங்கிற்குப் பேராசிரியர் க. வெள்ளைவாரணனார் தலைமையேற்றார். அன்று பிற்பகல் கருத்தரங்கிற்கு பேராசிரியர் டாக்டர் வ சுப மாணிக்கம் தலைமை யேற்றார். அவர் தமது தலைமை யுரையில் சிலப்பதிகாரக் காலத்தை விருப்பு வெறுப்பின்றி ஆராய்ந்து ஒரு முடிவு காண வேண்டும் என்னும் கருத்தை வலியுறுத்திப் பேசினார். திரு. ந. வீ. செயராமன் நன்றி கூறினார்.

## சென்னைப் பல்கலைக் கழகக் கருத்தரங்கு

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையின் மூன்றாவது பொது நிலைப் பத்து நாள் கருத்தரங்கு 9-2-74 முதல் 18-2-74 முடிய நடைபெற்றது.

9 முதல் 18 ஆம் நூற்றாண்டு வரை உள்ள இடைக் காலத் தமிழின் இலக்கிய இலக்கண இயல்புகள் II பற்றிய கருத்தரங்கைத் துணைவேந்தர் தாமரைத் திரு. நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள் தொடங்கி வைத்து நூல்களை வெளியிட்டார். கருத்தரங்கிற்குத் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் தலைமை தாங்கினார்.

பல்கலைப் பழந்தமிழ், இந்திய விடுதலையும், தமிழ் இலக்கியமும், தமிழாய்வு - தொகுதி-2 ஆகிய நூல்கள் வெளியிடப் பெற்றன.

பேராசிரியர்களும் தமிழறிஞர்களும் ஆகப் பதின்மர் பலதுறைக் கட்டுரைகளை வழங்கினர். பத்து நாட்களிலும் பேராசிரியர்களும் அறிஞர்களும் அரிய வரவேற்புரை நிகழ்த்தினர்

கருத்தரங்கினை யொட்டிச் சை. சி. நூற்பதிப்புக் கழகத்தாரும், தமிழ்நாட்டுத் தொல் பொருள் துறையினரும் முறையே அரிய நூற் காட்சி, கண்காட்சிகளை நடத்தினர்

## திரு. டி. டி. கிருட்டிணமாச்சாரியார் மறைவு

இந்தியப் பேரரசின் முன்னாள் நிதி அமைச்சரும் சிறந்த பொருளியல் வல்லுநரும், வணிகத்துறைப் பெருமகனாருமான திரு. டி. டி. கிருட்டிணமாச்சாரியார் அவர்கள் 7-3-74இல் காலமானார்கள் என்ற செய்தியறிந்து வருந்துகிறோம். அவர்கள் தெரிவித்த வண்ணம் தாம் தொகுத்துள்ள 5000 நூல்களும் விவேகானந்தர் கல்லூரிக்கு வழங்கப் பெற்ற நற்செய்தி தமிழர் உளளங்கட்கு அளவில் மகிழ்ச்சி தருகின்றது. அவர்தம் குடும்பத்தார்க்கும் நண்பர்கட்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

---

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகத்திற்காக
சென்னை 600001 2 140, பிரகாசம் சாலை, அப்பர் அச்சகத்தில்
திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிடப்பெற்றது.
ஆசிரியர் : வ. சுப்பையா.

செந்தமிழ்ச் செல்வி பற்றிய உரிமை விளக்கம்–1956 ஆம் ஆண்டுச் சட்டம் - விதி 8 - படிவம் 4 இல் கண்டுள்ளபடி

1. வெளியிடும் இடம் : 1/140, பிரகாசம்சாலை, சென்னை-1

2 வெளியீட்டு முறை : திங்களிதழ்

3. அச்சிடுவோர் பெயர் : அப்பர் அச்சகம்

இனம் : இந்தியர்

முகவரி : 2/140, பிரகாசம்சாலை, சென்னை-1

4. வெளியீட்டாளர் பெயர் : திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்.

இனம் : இந்தியர்

முகவரி : 1/140, பிரகாசம்சாலை, சென்னை-1

5. ஆசிரியர் பெயர் : திரு. வ. சுப்பையா பிள்ளை

இனம் : இந்தியர்

முகவரி : 1/140, பிரகாசம்சாலை, சென்னை-1

6. இதழ் உரிமையாளர்கள், மூலதனத்தில் நூற்றுக்கு ஒரு விழுக்காட்டிற்கு மேற்பட்ட பங்குடைய பங்காளிகள் ஆகியோரின் பெயர்களும் முகவரிகளும் :

1 திரு T. S இராமலிங்கம் பிள்ளை, M. A., B. L.
ஓய்வு பெற்ற சட்டத்துறைச் செயலாளர்,
7, வேடி தேசிகாச்சேரி சாலை, ஆழ்வார்பேட்டை.
மைலாப்பூர், சென்னை 4

2 திரு வ. சுப்பையா பிள்ளை
6. பவழக்காரத் தெரு, சென்னை-1

3 திருமதி சு மங்கையர்க்கரசி
6. பவழக்காரத் தெரு, சென்னை-1.

4. திரு R M S. கோபாலகிருஷ்ண பிள்ளை
வணிகர், சாத்தான் குளம்,
(திருநெல்வேலி மாவட்டம்)

5 திரு M K. சிவகாமிநாத பிள்ளை
நான்காவது மாடி, புரோச் கட்டிடம்,
பிரின்சஸ் தெரு பம்பாய்-2

6 திரு N S. சுந்தரம், பார்-அட்-லா,
134, தெற்கு இராச வீதி, தூத்துக்குடி.

7. திரு. மு காசிவிசுவநாதன் செட்டியார்
வங்கியார், பாகனேரி, (இராமநாதபுரம் மாவட்டம்)

8. திருமதி கா. லட்சுமி ஆச்சி
(திரு. காசிவிசுவநாதன் செட்டியார் மனைவி)
பாகனேரி.

9. திரு. பெரி. அழ. மு. நா. நாராயணன் செட்டியார்
உரிமையாளர், பாரி அச்சகம், 127, பிரகாசம் சாலை, சென்னை.

10. டாக்டர் அழகப்ப செட்டியார்
கல்வித்துறை அறக்கட்டளை,
காரைக்குடி, (இராமநாதபுரம் மாவட்டம்.)

11. திருமதி க. வடிவழகி
(திரு. இரா. கலியாணசுந்தரம் மனைவி)
3, மேட்டுத் தெரு, சென்னை-1.

12. திருமதி மு. வயிரமணி
(திரு இரா முத்துக்குமாரசாமி மனைவி)
3, மேட்டுத் தெரு, சென்னை-1.

13. திருமதி பழ மீனாட்சி ஆச்சி
(திரு S. M. பழனியப்ப செட்டியார் மனைவி)
11, ரட்லண்ட் கேட், 2-வது தெரு,
சென்னை-6.

14. திரு S. Ct. சிதம்பரம் செட்டியார்
162, அவிநாசிசாலை, கோயமுத்தூர்-1.

15. திரு. A Kn. அருணாசலம்
(திரு.கண்ணப்பசெட்டியார்புதல்வர்) நாயனார் குளத்தெரு,
நாட்டரசன் கோட்டை, (இராமநாதபுரம் மாவட்டம்)

16. திரு T. S. ஜம்புலிங்கம் செட்டியார்
திருப்பூர் இல்லம், கோயமுத்தூர்.

17. திரு Rm. K. Rm. இராமசாமி செட்டியார், வங்கியார்
திட்டை, (தஞ்சை மாவட்டம்)

18. திரு. இரா. கலியாணசுந்தரம், பி.எஸ்.ஸி.
3, மேட்டுத்தெரு, சென்னை-1.

19. திரு. இரா. முத்துக்குமாரசாமி, எம்.ஏ., பி.லிப்.
3, மேட்டுத்தெரு, சென்னை-1.

மேலே தரப்பட்டுள்ள விளக்கங்கள் அனைத்தும் எனது முழு நம்பிக்கைக்கும் அறிவுக்கும் ஏற்ப உண்மையானவை என வ. சுப்பையா பிள்ளையாகிய யான் உறுதியளிக்கிறேன்.

12—3—1974

(ஒப்பம்) வ. சுப்பையாபிள்ளை
பதிப்பாளர்

# கழகப் புதிய வெளியீடுகள்

## அழகொழுகும் ஐந்து அருட்பாடல் நூல்கள்

திருக்குறள் தெளிவுரையினைப்போல், அருட் பாடல்கள் சிலவற்றை அழகிய முறையில் தொகுத்துக் கையடக்கமான பதிப்பாக, எல்லார்க்கும் பயன்படும் புதிய முறையில் வெளியிடக் கருதி, கீழ்க்காணும் ஐந்து நூல்களைக் கழகம் வெளியிட்டுள்ளது:

### திருவருட்பாப் புகழ்த்திரட்டு

*—வள்ளலார் இராமலிங்க அடிகள்*

இது திருக்குறள் தெளிவுரையைப்போல் கையடக்கமான தொரு பதிப்பு. இதன்கண் திருவருட்பாவினின்று 'திருவடிப் புகழ்ச்சி' 'மகாதேவமாலை' 'அருட்பெருஞ் சோதி அகவல்' 'அருட் பெருஞ் சோதி அட்டகம்' ஆகிய நான்கு பதிகங்கள் முழுமை யாகவும், மற்றுமுள்ள பதிகங்களினின்றும் கீர்த்தனங்களினின்றும் பிள்ளையார், முருகன், சிவபெருமான், உமையம்மை, அம்பல வாணர், திருமால் ஆகிய தெய்வங்களைப்பற்றி வள்ளலார் பாடியுள்ள பாடல்களுள் சிலவும் இடம் பெற்றுள்ளன. விலை 2-25

உயர்ந்த பரிசுப் பதிப்பு விலை 4-00

### பட்டினத்துப் பிள்ளையார் திருப்பாடல்கள்

இதன்கண் பட்டினத்துப் பிள்ளையார் பாடிய, பதினொராந் திருமுறையிலுள்ள திருப்பாடல்களும் தனிப்பாடல்களும் அழகிய முறையில் அன்பர்கள் படித்துப் பயன்பெறும் வகையில் தொகுத்துத் தரப்பெற்றுள்ளன.

### தாயுமான அடிகள் திருப்பாடல்கள்

இறையருள் கூட்டவல்ல அரிய மெய்ப்பொருட் கருத்துக்க ளடங்கிய தாயுமான அடிகள் பாடல்கள் யாவும் இதன்கண் இடம் பெற்றுள்ளன. சைவ மெய்யன்பர்கள் ஓதி வழிபாடியற்றுதற்கும் பாடி மகிழ்தற்கும் துணைபுரிவது இச் சிறுநூல், கையேந்தற்கழகும் உள்ளத்திற்கு ஒளியுந் தரும்

### திருவாசகத் திருப்பாடல்கள்

மாணிக்கவாசகர் அருளிய தேனினும் இனிய அரிய திருவாசகத் திருப்பாடல்கள் யாவும் இதன்கண் இடம் பெற்றுள்ளன. சிவநெறிச் செல்வர்கள் கையேந்தி ஓதி உணர்தற்குரிய அழகியநூல்.

### திருப்புகழ்த் திரட்டு

அருணகிரிநாத அடிகள் அருளிய திருப்புகழ்ப் பாடல்களுள் அரிய பாடல்களின் தொகுப்பாக இந்நூல் அழகிய முறையில் வெளி வந்துள்ளது.

பதிவு எண் : M. 4899

# பிற பதிப்பாளரின் வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| பெண் குலப்பெருமை —திருமுருக கிருபானந்த வாரியார் | 6 | 00 |
| உலகத் தமிழ் —நெ. து. சுந்தரவடிவேலு | 2 | 00 |
| எங்கே போகிறோம்—அகிலன் | 7 | 50 |
| தமிழ்மொழி வரலாறு —தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் | 20 | 00 |
| கண்ணகி வெண்பா — மு. ரா. கந்தசாமிக் கவிராயர் | 3 | 00 |
| ஆறுகள்—தொகுப்பாசிரியர் : ம. வே. பசுபதி | 3 | 00 |
| இசைத் தமிழ்ப் பாமாலை —இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகர் | 4 | 00 |
| சங்கர நாராயண சுவாமி கோவில் புராணம் —சிவலமாற பாண்டியனார் | 1 | 60 |
| சேரநாடும் செந்தமிழும்—செ. சதாசிவம் | 3 | 00 |
| ஆய்வுக் கொத்து – பதிப்பாசிரியர் : க. ப. அறவாணன் M.A., B.O.L | 5 | 00 |
| **Geta and Kural**—Dr. M. Muthuraman | 5 | 00 |
| **Mahabharata**—C. Rajagopalachari | 12 | 50 |
| **Path of Pure Consciousness** —N. Murugesa Mudaliar | 10 | 00 |
| **Proceedings of the third International Conference Seminar** | 40 | 00 |
| என்றும் புதுமை (கட்டுரைத் தொகுப்பு) | 2 | 50 |
| குறள்நெறி சித்தநெறி —புலவர் நா. பசும்பொற்கிழார் | 2 | 00 |
| சொர்ணக்கிளி—சி. ஆர். இராஜம்மா | 3 | 75 |
| இலக்கியத்தில் காதல் - கண்ணதாசன் | 4 | 50 |
| நீடிய நல்வாழ்வு—திருமதி சி. சேதுராம் | 3 | 00 |
| புனிதநெறி—குன்றக்குடி அடிகளார் | 3 | 50 |
| தமிழ்கூறு நல்லுலகம்—புருகு சுப்பிரமணியம் | 3 | 00 |
| தமிழ் மாநாடு—டாக்டர் சாலை இளந்திரையன் | 2 | 00 |

அப்பர் அச்சகம், சென்னை-600 001.